"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

பூலோகவியாசன்.

பிரதி மாதமும் பிரசுரஞ் செய்யப்படும்.

தொகுதி 3.] சென்னை 1905௵ அக்டோபர்மீ 15உ [பகுதி 1.

"வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில"

நமதுபத்திரிகையின் மேம்பாடு.

உலக சிருஷ்டிப்பு பலவற்றுள் மானிடப்பிறவியே அரிதென்பார் அறிஞர். அப்பிறவியிலும் கல்வியுணர்ந்தவர்களா யிருத்தலதியவசியமாம். அக்கல்வியினால் நாற்பொருளை யடையக்கூடும். அக்கல்வியையே விருத்தி செய்தற்பொருட்டு ஜனோபகாரமாய் சுலபசந்தாவுக்கு நமதுபத்திரிகை உலவி வருகின்றது. அவ்வாறு உலவும்பத்திரிகைக்கு வயதோ இரண்டும்முடிந்தது. இம்மாதப்பத்திரிகையானஇதுமூன்றாவது வருடத்தின்முதல்பத்திரிகையாம். சிறுகுழவியாயிருந்ததால் சிலசந்தாதாரர்களால் போஷிக்கப்பட்டுவந்தது. வருடமூன்றாகவும் அதிகமாக விருத்தியை நாடி இன்னும் பலசந்தா தாரர்களின் உபகாரத்தை நாடுகிறது. இதற்கு முன்னிருந்த சந்தாதாரர்களோடு இவ்வருடம் இன்னும் பலரும் சேர்ந்து வளர்ப்பார்களென பிரார்த்திக்கின்றோம். முதல்வருடம் டிம்மி 2 பாரம், 16 பக்கங்கள் கொண்டதாயிருந்து இரண்டாவது வருடம் 3 பாரம் 24 பக்கங்களாக வெளிவந்தது. மூன்றாவது வருடம் ராயல் 3 பாரமாக வளர்ந்து வந்ததைகையொப்பநேயர்கள் கவனிப்பார்கள். இதுபற்றி கடந்தவருட சந்தா செலுத்தாத இரண்டொருவரும் இவ்வருட சந்தாவையும் சேர்த்து அனுப்பிவிடுவார்களாக. முதல்வருடசந்தா செலுத்திய அன்பரிடம் இரண்டாவது வருடசந்தாவை வற்புறுத்தி வாங்காதிருந்தது உலோகோபகாரத்தையும் மனுஷத் தன்மையையும் முன்னிட்டே. இம்மாதமும் அவர்கள் அனுப்பி விடுவார்கள் என்னும் நன்னம்பிக்கையா லேயே அனுப்பினோம். அவர்களவ்வித மனுப்பாதும், பத்திரிகை பெறவிரும்பாதும் போவார்களானால் எழுதி விடுவார்களல்லவா?என்பதுபெருநோக்கு.இவ்வாறு எழுதினேமென்று கடந்த வருடசந்தாதாரரில் கொடாதா இரண்டொருவர் இப்போது பத்திரிகையை வேண்டாமென்றெழுதி விடுவதுஞாயமாகக்காணப்படாது. ஆகையால் பாக்கியைச் செலுத்திவிட்டு நிறுத்திவிடுவது தர்மசிந்தையாம். இரண்டுவருடம் நடந்தது இனியும் நடக்குமோ என்னமோ. முந்தி ரூபாயை அனுப்பினால் வீணாகுமே என்று ஒருவரும் நினைக்கவே படாது. ஏனெனில்

இப்பத்திரிகைக்கு, எமது வழிபடுங்கடவுளின் திருவருட் செயலென்ன! சித்தராதீனகர்த்தர் திருக்குருகூர், ஸ்ரீமத்- ஞானசித்தசுவாமிகளின் ஆசீர்வாதமான அன்பென்ன! இரங்கோன் ஆனரெரி மாஜிஸ்ட்ரேய்ட் ராய்பாகதூர் ஸ்ரீமான். [illegible] - மதுரைப்பிள்ளையவர்களின் உதவியென்ன! ரங்கோன் செஷன்கோர்ட் இன்டர்பிரேடர் ஸ்ரீமான் விச்சூர் - முத்துக்குமாரசாமிமுதலியார் B. A. அவர்கள் உபகாரமென்ன! எமது அச்சாபீஸ் அதிபர் ஸ்ரீமான் ஈ-இரத்தினவேலு முதலியாரவர்களுதவியென்ன, பெங்களூர்-சித்திரக்கவிநாவலர் ஸ்ரீமான் A. V. ஜோசேப்பு பிள்ளையவர்களுதவியென்ன! இவரது மாணுக்கர் ஸ்ரீமான் C. S. ஞானப்பிரகாசம் உபாத்தியாயரவர்கள் பெரும்பிரயாசையான உபகாரமென்ன! பெங்களூர் ஸ்ரீமான் S. M. நாராயணசாமிபிள்ளையவர்களுதவியென்ன! (கோலார் கோல்ட்பீல்ட் சாம்பியன் ரீவ்ஸ்)மதுவிலக்கு சங்கத்தினங்கத்தொருவராகிய ஸ்ரீமான் V. C தம்புசாமிப் பிள்ளையவர்களின் ஊக்கமான உபகாரமென்ன! பெங்களூர்தண்டு மிறைக்கவிநோளரி ஸ்ரீமான்-உ-ஜான் அந்தோனிப்பிள்ளையவர்கள் சன்மானமென்ன! மாரிகுப்பம் ஸ்ரீசிவகேசவர்த்வைத சிற்சபையின் காரியதரிசி ஸ்ரீமான்- M. Y. முருகேசம்பிள்ளையவர்களின் உபகாரமென்ன! ஷெ சபையின்-அக்கிராசனாதிபதிஸ்ரீமான் M. சங்கரமேனன், ஸ்ரீமான் M. பாபுபிள்ளை, இவர்கள் உபகாரமென்ன! காரியதரிசி ஸ்ரீமான் C. குருசாமிபிள்ளையவர்களுபகாரமென்ன! மாரிகுப்பம் ஸ்ரீமான்-D. அந்தோனிப்பிள்ளையவர்களின் சன்மானமென்ன! கோலார்கொரமாண்டல்வாசிஸ்ரீமான் P. A. சித்திரைப்பிள்ளையவர்கள் பெரியஉபகாரமென்ன. உரிகம்ஹால் ஸ்ரீமான் M. கன்னியப்பன்பிள்ளையவர்கள் அன்பென்ன! உரிகம் சப்ளையர் ஸ்ரீமான் ச.மு.ரா.ஆறுமுகப்பிள்ளையவர்கள் தற்போது எடுக்காதெடுத்த முயற்சியென்ன! மற்றும் நன்கொடையாளரின் உபகாரமென்ன! அரிய கையொப்பக்காரர்களின் ஆதரணையென்ன! இனி *இவ்வருடத்தில் ஆதரணைக் கர்த்தராகும் ஸ்ரீமான்கள் என்ன! இனி கையொப்பம் செய்யும் அன்பாளரின் உதவி யென்ன! பொருட்சகாயமும் வளர்ச்சியின் சகாயமும் இவ்வாறிருந்தாலும், கடந்தவருடம்நமது பத்திரிகையின் விருத்தியைநாடி பலஅரும்பெரும் விஷயங்களை எழுதியுதவிய - சென்னை கிறிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் - ஸ்ரீமான் - ஈக்காடு இரத்தினவேலு முதலியாரவர்களென்ன! இந்துதியலாஜிகல் உயர்தரப்பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் - கோ - வடிவேலுச்செட்டியாரவர்களென்ன; மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஆங்கிலத்தமிழ்வித்துவான் - ஸ்ரீமான், விச்சூர் முத்துக்குமாரஸ்வாமி முதலியார் B. A. அவர்களென்ன! முத்தமிழ்க்கவியரசு தஞ்சை - டாக்டர், ஸ்ரீமான் சண்முகம்பிள்ளை என்பாரென்ன! இராயபுரம் வித்வான் - வே. கி. நாராயணஸ்வாமி பிள்ளையவர்களென்ன! வேப்பேரி S. P. G. உயர்தர கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான், கா - ரா - நமச்சிவாய முதலியாரவர்களென்ன! இராயப்பேட்டை பண்டிதர் சங்கை-க. அயாத்திசாசரவர்களென்ன!

---

* சில அன்பர்களை ஆதரணை கேட்டிருக்கிறோம் அவர்கள் செய்தீரும் அவர்கள்பெயரை இரண்டாவது பத்திரிகையில் வெளியிடுவோம்.

சர்வதேசாபிமான மதுவிலக்குச் சபாங்கத்தொளொருவராகிய ஸ்ரீமான்கோ. முனிசாமிப்பிள்ளையவர்களென்ன ! சென்னை பௌத்தவாலிப சங்கத்து காரியதரிசி சி. ம. இ மூர்த்தி .T. S. அவர்களென்ன! மெஸ்ஸர்ஸ்-பிரான்க்அன்டு கோடுபாஷ் M. இராஜிமுதலியார் என்ன ! இனிமேல் பலவிதமான சாராம்ஸங்களை யெழுதியுதவும்படியாக முன்வந்துள்ளவர்களோடுஇனியும் வரும் பிரபலவித்வமணிகளென்ன! கடிதவாயிலாக பலபொது நல்விஷயங்களையெழுதாநின்ற கல்வியாளரென்ன ? * இன்னும்பல சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவதாகவாக்களித்து முன்வந்துள்ள உத்தமோபகாரர்களென்ன ! கடந்தவருடமும், இவ்வருடமும் நன்கொடையாக அதிகசந்தாவை யனுப்பிய தகமையாளரென்ன ! இவ்வாறு பற்பல உபகாரங்க ளிருக்க நமது பத்திரிகைக்கு இடையூறு வராதென்பது சொல்லவேண்டுமா ?

அன்பர்களே ! வெகு குறைந்த சந்தாவாகிய ரூபா ஒன்றை யனுப்பி நமது பத்திரிகையை முன்னுக்குக்கொண்டு வருவீர்களெனப் பிரார்த்திக்கின்றனம்.

P. M. V. (பத்திராதிபர்)
S. V. M. (உபபத்திராதிபர்.)

---

* இவர்கள் சேர்த்தனுப்பியதும் பத்திரிகைவாயிலாகஇவர்கள்பெயரைவெளியிடப்படும்

திருக்குறள்.

இனியவை கூறல்.

இவ்வதிகாரத்து தலைப்பின் கருத்தாவது மனத்திலே உண்டாகும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கு சாதானமாயுள்ள இனியசொற்களைச்சொல்லுதல் என்பதாம். மனத்திலே உண்டாகும் மகிழ்ச்சிக்குச்சாதனமாயுள்ளவைதான் இனியசொற்கள் என்னும் இலக்கணத்திற்குரியனவே யன்றி மற்றபடி உட்பகைகொண்டு மேலுக்குத் தேனொழுகப்பேசும் சொற்கள் கடுஞ்சொற்களே எனக் கொள்ளல்வேண்டும். புறச்சிநேகமும் உட்பகையும் மகாவிஷத்தன்மையுடையன வென்பதை "புறநட்டகப்வேர்ப்பார் நச்சுப்பகைபைவெளியிட்டுவேறுதல்வேண்டும்..." என்னும் பெரியோர்வாக்கல் காண்க.இவ்வதிகாரம்விருந்தோம்பற்குப்பின் வைக்கப்பட்ட தென்னையோவெனில் கண்டவிடத்து முகமலர்ச்சியும் ஓம்பும்போது உபசரணையுமாகிய இரண்டினையும் மனமலர்ச்சியாலுண்டாகும் இன்சொலால்தான் அறியக்கூடுமாகையால் விருந்தோம்பலில்முக்கியபாகத்திற்குரியஇனியவைகூறல் அடுத்துவைக்கப்பட்டது இன்சொல்லுக்கு இலக்கணங் கூறவேண்டி நாயனர்

"இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" என்றார்.

இன்சொல்லுக்கிலக்கண மென்னவெனில்? ஜாதி ஆசார முதலியவைகளாற் பேதிக்கப்படாதிருக்கும் தர்மத்தின் நெறியைக்கண்டவர்கள் அன்போடும் பேசுகின்ற சொற்களாம். மேற்கூறியபடி அறமின்ன தென்றறியாதழலும் மாக்கள்பிறரைவஞ்சிக்க சிறிதும் அன்பில்லாதவர்களாய் உலகித்திற்கு இதம் சொல்பவர்களைப்போல் நடித்து கூறுவனவெல்லாம் தோற்றமினிமையாக

காணப்படினும் உண்மையில் இன்சொலாகாவெனக்குறிப்பிட்டனர். உள்ளடங்கியிருக்கும்மற்றவிஷயங்களை நண்பர் அறிந்துகொள்வார்களாக.

ஈகையினுமின்சொலேமிகச் சிறப்புடைத்தென்பதைக்காட்ட

“அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்” என்றார்.

தனிகர்செல்வமிகுதியால் விருந்தோம்பி புகழெய்வரென்றுவறியர் தங்களைத் தாங்களே நிந்தித்துக்கொள்ளாதிருக்க அவ்வறியரும் விருந்தோம்பலின் பயனினும் மேலாம் புகழடையக்கூடுமென்றும் அடையக்கூடும்வழி முகமலர்ந்து 'பிரயோசனப்படக்கூடிய இனியசொற்களைச்சொல்லுதலேயெனக்கூறினர். ஆகவே உள்ளன்போடும் இன்சொற்களைச் சொல்லும் வறியரே கட்டாயயுக்திற்காக விருந்தோம்பும்செல்வரினும்செல்வரெனக்கொள்ளப்பட்டனர். இன்சொல்லின்றி தர்மமில்லையெனக்காட்ட “முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா மின்சொ லினதே யறம்” என்றார். இதில் முதலில்மனத்துண்டாகும் மகிழ்ச்சியைக்கொண்டுமுகத்தான் விரும்பி பிறகு கண்களாலினிது நோக்கிக் கடைசியாகவாயால் இன் சொற்களைச் சொல்லுமிடத்தில்அதாவது முறையே மனம் காயம் வாக்கினால் நேசிக்குமிடத்தில் தான் தர்மம் எனக்காட்டப்பட்டது. முதலிரண்டிருந்தும்கடைசியான இன் செல்லில்லையேல் அறம் கெடுமென்றுங்கொள்க. அப்பொழுதுதான் உலகமும் விரும்பும் என்பதை “மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின, வன்மொழியி னாலிகழு மண்ணுலகம்.” என்னும் பெரியோர் வாக்காலறிக. பின்னும் இன்சொல் கூறுபவர் அடையும் இம்மைப்பயனை “துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு, மின்புறூஉ மின்சொ லவர்க்கு” என்பதால்விளக்கினர். பயனென்னவெனில் இவ்வுலகத்தில் எல்லாராலும் வெறுக்கப்படுவதும் அஞ்சப்படுவதுமாகிய வறுமை இன்சொல்லுடையவர்களை அணுகாது என்றார். அஃதெப்படியெனில் இன்சொற்கூறுவதினால் எவரும் நஷ்டத்தையடையாதபடியால் வெறுக்கக்காரணமின்றி அவரைநேசிப்பார்கள். ஆகவேபகையில்லாது அதன்மூலமாய்வரக்கூடிய கஷ்டங்களை அடையமாட்டார். பின்னும்அப்பயனை விவரிக்க “பணிவுடையனின்சொல னாத லொருவற், கணியல்ல மற்றுப் பிற” என்றார். உலகத்தின் ஆபரணங்களெல்லாம் புகழுக்கு முக்கியசாதனங்களல்லவென்றும் ஆகவே பிரயோஜனமற்றனவென்றும் அழியாப் புகழிற்கேதுவாகிய தாழ்மையும் இன்சொல்லும் மற்ற ஆபரணங்களைவிட மேலானதென்றும் காட்டினர். தாழ்மையும் இன்சொல்லும் ஆகிய இவ்விரண்டில் ஒன்றில்லாதிருந்தும் மற்றதுள்ளதால் பயனில்லையெனக்காட்ட “பணிவுடைய னின்சொலன்” என்றார். பிறகு இன்சொற்கூறுபவர் அடையும் மறுமைப்பயனை விவரிக்க “அல்லவை தேய வறம்பெருகு நல்லவை, நாடி யினிய சொலின்” என்றார். நன்மை பயக்கும் சொற்களை ஆராய்ந்து இனிய சொற்களைச் சொல்பவனது பாவந்தேய புண்ணியம் வளரும் என்பது இதன்கருத்து. இதில் “நல்லவை நாடி” என்பது கவனிக்கத்தக்கது. ஒருவன் பிறனுக்கு நன்மைசெய்ய வேண்டுமென மனப்பூர்வமாய்க்கருதி அப்பிறன் தீயவழியில் நடப்பதைக்கண்டு தடுக்க அவனுக்கு விரோதமாகச் செய்தாலும் அப்பிறனடையும் நன்மையைக் கருதும்போது இவன் செய்த தீமையும் நன்மையாகக் கொள்வர் மேலோர். ஏனெனில் நாடியது நன்மையாகையால் நன்மையை நாடி கடுஞ்சொல்லாலன்றி இன்சொலாற் சொல்லுதல் மேற்சொன்னதினு மினிதெனக்காட்டினர். அப்படிக்கில்லாமல் தீமையைநாடி இன்சொல் பேசுபவர்க்கு புண்ணியந்தேயபா

வம் பெருகும் என்றறிக. பிறகு "நயனீன்று நன்றிபயக்கும் பயனீன்று, பண்பிற் றலைப்பிரியாச் சொல்" என்பதால் மேற்சொல்லிய இம்மை மறுமைக்கு வேண்டியவைகளை அளிக்கும் எனதொகுத்துக் காட்டினர். அதாவது இம்மைக்கு நீதியையும் மறுமைக்கு அறத்தையு முண்டாக்கு மென்றார். "பண்பின் றலைப்பிரியா" என்றது மேற்குறளில் "நல்லவை நாடி" என்பதை ஆமோதித்து நிற்கின்றது பின்னும் இருமைப் பயனை வற்புறுத்திக் காட்ட "சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு, மிம்மையு மின்பந் தரும்" என்றார். இருமையிலும் இன்பத்தை யளிக்குமென்பதிதன்கருத்து. இங்கு இன்சொல்லுக்கு சிறுமையாவதென்னையெனில் பிறரை வருத்தப்படச்செய்வதே, இன்சொல் வன் சொல் இவைகளின்பயனை ஒத்திட்டு பின்னைய துடையவர்களை இகழுவான் "இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ வன்சொல் வழங்குவது" என்றார். ஆகவே இன்சொலாற்றான் இன்பமுளதென்றும் வன்சொல்லாற் றுன்பம் நேரும் என்றுங்காட்டி துன்பத்தை வருவித்துக்கொள்ளல் எவ்வளவு மதியீனமென்று இக்குறளால் வினவுகிறார். இதனால் வன்சொல்லின் குற்றங்கூறப்பட்டது. பின்னும் வன்சொல்லின் இழிவைவிளக்க "இனிய வுளவாக வின்னாத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந்தற்று." என்றார். நன்மையைக் கொடுக்கும் இனிய சொற்களிருக்க அவைகளைக் கையாடாது தீமையைப் பயக்கக்கூடிய வன்சொற்களையே மிகுதியாகக் கொள்ளல்; அருமையான இனிய பழமிருக்க அதனைவிட்டு கசக்கக்கூடியதும் நோய்க்கிடமானதுமான காய்களைத்தின்று கஷ்டம் அனுபவிப்பது எவ்வளவு மதியீனமென்று இகழ்ந்தனர். ஆகவே அன்பர்கள் தாழ்மை பாராட்டி இன்சொற்களையே கையாடி வன் சொல்லை நீக்கி சகோதரத்துவம் பாராட்டி நடப்பதே மேன்மை. அப்படிக்கின்றி வாசித்த நண்பர்களும் வன் சொல்லையே மிகுதியாக உபயோகித்து பத்திரிகைகள் வெளியிட்டு ஒருவர் இழிவை மற்றொருவர் எடுத்துக்காட்டி, வாசிப்பில்லா நண்பரும் பார்த்து கேவலமாகப் பேசவைத்துக்கொள்வதை என்னென் றழைக்கலாம்? இனியேனும் எம் சகோதரர்கள் பட்டினத்தடிகள் பாடல்களிலொன்றாகிய,

"பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போலருந்தி நரிபோலுழன்று நன்மங்கையரைத்
தாய்போற் கருதி தமர்போ லனைவர்க்குந் தாழ்மைசொல்லி
சேய்போ லிருப்பர் கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே"

என்பதில் தடித்த எழுத்தாலிருப்பவைகளை முற்றும்கவனிக்க தாழ்மையாய் வேண்டுகின்றோம்.

கோ - மு - சென்னை.

களவழி நாற்பதுரை.

நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத்—தாண்மாய்ந்து
முன்பக லெல்லாங் குழம்பாகிப் பின்பகற்
றுப்புத் துகளிற் கெழூஉம் புனனாடன்
றப்பியா ரட்ட களத்து.

(பொழிப்புரை) நீர்சூழ்ந்த நாட்டையுடைய செங்கட்சோழன் பிழைத்தவரைக் கொன்ற போர்க்களத்தில்; காலைப்பொழுதில் வந்தடைந்த போரில் பட்டவருடைய வாளழுந்ததலா லொழுகும் உதிரத்தை; யானைகள் கலக்க

(அவற்றின்) காலாலே சுருங்கி, முற்பகற் பொழுதெல்லாஞ் சேறாகி பிற்பகற் பொழுதில் பவளத்துகள்போல (ஆகாயமெங்கும்) பரந்து செறியாநிற்கும்..

(விசேடம்) களத்தினிடத்து நிகழ்ந்த செய்தியை யுணர்த்தும் நாற்பது செய்யுளும் அதனுரையு மென்பதே இத்தலைப்பின் போந்த பொருளாகும். "களவழிநாற்பது" எனுமிந்நூலியற்றியவர் பொய்கையார் எனுந் திருநாமமுடைய பெரும்புலவர். இந்நூற் சங்கமருவிய செய்யுள்களுளொன்று. இது சோழனது பராக்ரமத்தைப் புகழ்ந்து பாடிய நூலெனக் கொள்ளப்பெறும். இப் பாடலின் கருத்தேதோவெனின்? சோழன் புரிந்தபோரில்பட்டவருடைய உதிரவெள்ளமானது யானைகளுடைய காலால் மிதிப்பட்டு முற்பகற் பொழுதெல்லாஞ் சேறாகக்கலங்கி, பிற்பகற்பொழுதிற வெயிலுஷ்ணத்தாற் காய்ந்து பவளத்தூசுபோல ஆகாயமெங்குஞ் செந்நிறமாக பரந்து செறியாநிற்குமென்பதே. [illegible] உதிரவெள்ளத்தினது பிரவாகமும், யானைக்கூட்டத்தினது விசேடமும், சோழனது தோள்வலியும் விளக்கப்பட்டது. 1.

ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொண்குருதி
கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனனாடன்
ஆர்த்தம ரட்ட களத்து.

(பொ - ரை) நீர்நாட்டையுடைய செங்கட்சோழன் குணலையிட்டுப் போரிற்கொன்ற போர்க்களத்தில்; ஒழிந்த நிலத்திற் சேர்ந்த யானையின்கீழ் (கிடந்த) மேற்போர்வையில்லாத இடிபோன்றொலிக்கு முரசத்தினூடு செல்லும் ஒள்ளிய வுதிரம், கார்ப்பருவம் மழைபெய்தபின்பு செங்குளத்தினது கரையின்கீழுள்ள நீர்த்தூம்பானது நீருமிழ்தலையொத்தது.

(வி - ம்) ஒழிந்தநிலத்திற் சேர்ந்த யானையின்கீழ் கிடந்த முரசமெனும் வாத்தியத்தின் வழியாகச் செல்லும் இரத்தப்பிரவாகமானது; குளக்கரையின்கீழ் வைக்கப்பட்ட நீர்க்குழாய் நீர் உமிழ்தலை யொத்திருந்த தென்பதே. இதில் சோழன் மாற்றாருடைய யானைகளைக் கொன்ற தன்மையும், அவ்வியானைக்கிருந்த இரத்தபுஷ்டியையும் குறிக்கப்பட்டது. 2.

ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வார்
இழுக்குங் களிற்றுக்கோ டூன்றி- யெழுவர்
மழைக்குரன் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை யட்ட களத்து.

(பொ - ரை.) மேகத்தின் முழக்கம் (போன்ற) பெரிய முரசினையுடைய நிறைந்தநீர் நாட்டையுடையசோழன் தப்பினவரைக் கொன்ற போர்க்களத்தில்(அடைந்தாராகி) (பட்டோர்உடலினின்று) ஒழுகும் உதிரத்தைக் கலக்கி (வழுக்கி) வீழ்வோர்;(உதிரவெள்ளத்தால்) இழுக்கப்பட்ட யானையினதுகொம்புகளை ஊன்று கோலாகக் கொண்டு எழாநிற்பர்.

(வி - ம்) நீர்வளப்பம் பொருந்திய நாட்டையுடைய சோழன் புரிந்த போரில் வந்து வீழ்ந்தவர்களுடைய தேகத்தினின்றும் ஒழுகும்இரத்தத்தைக் கலக்கி வழுக்கி வீழ்வோர்; இரத்த வெள்ளத்திலிழுக்கப்பட்ட யானைதந்தங்களை யூன்றுகோலாகக்கொண்டு (மீள) எழுந்திருப்பார்கள் என்பதே. இதில்

சோழனுடைய போரிற் பட்டவர்கள் உதிரத்தைக் கக்கிச் சாவார்க ளென்பதும், சோழன் மாற்றாரைத் தப்பிப்போக விடுவதில்லை யென்பதும், இப்போரில் அநேகயானைகளு மடிந்ததென்பதும் விளக்கப்பட்டது. 3.

உருவக் கடுந்தேர் முறுக்கிமற் றத்தேர்ப்
பரிதி சுமந்தெழுந்த யானை—இருவிசும்பிற்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை யட்ட களத்து.

(பொ - ரை) செங்கட்சோழன் பகைவரைக்கொன்ற போர்க்களத்தில் அஞ்சத்தக்க கடியதேரைச் சிதைத்து, அந்தத்தேரினுருளினை சுமந்தெழுந்த யானைகள், பெரியஆகாயத்தில்செல்லுஞ்சூரியன் அடைந்தமலையையொத்தன.

(வி - ம்) சோழன் புரிந்த போர்க்களத்தில் அவனதியானைகள் மாற்றாருடைய தேரைப் பொடியாக்கி யத்தேரினுருளையை சுமந்தெழுதலானது சூரியன் அடைந்த மலையை யொத்தது என்பதே. இதில் சோழனுடைய யானைகளைப் பெரியமலைக்கும், மாற்றாருடைய தேர்ச்சக்கரத்தைச் சூரியனுக்கு முருவகப்படுத்தினர். ஆகவே சோழனுடைய யானையாகிய மலையின்மீது மாற்றாரது தேர்ச்சக்கரமாகிய சூரியன் வந்தடைந்ததென்க. 4.

தொடர்ச்சியுண்டு.

தமிழுழவன்.

கமலாவதி.

பொன்னினு லிழைத்த மதில்கள் சூழ்ந்த கூடகோபுரங்களும் மாடமாளிகைகளும் நிறைந்து வீதிகடோறும் தோரணங்களாலலங்கரித்து எங்கெனும் ஹர ஹர என்னுஞ் சத்தங் கடலினும் பெருங்கோஷமாயிரைத்தொலிக்கவும் அவண் வாழுங்குடிகள் தம்மிலுமிக்க பொறுமையுள்ளவராயிருப்பதைவாளாசிந்தித்து வெட்கி மௌனமாயிருந்தமலைகள் தம் விசனத்தை யாற்றாதனவாய்க் கூக்குரலிட்டழுவது போலுஞ் சத்தமிட்டுப் புறப்படும் மலையின் வீழருவி நீரானததன் கண்களிலிருந்து பாஷ்பஞ் சொரிவதுபோலத் திரண்டு ஆறாய்ப் பெருகியோடி யேரி குளங் குட்டைகண் முதலியன நிறப்பி வழிந்து செல்லாநிற்கும். ஜலங்கள் கழனிகட்குப்பாயுமுன்னம் மேகக்கூட்டங்களானவை (முன்னேயார்போய்த்தீண்டிவிடுகிறார்களோ அவர்களேராஜாஎனச்சிறுவர் பந்தயமிட்டுக்கொள்வதுபோலும்) அவ்வருவியின்ஜலங் கழனிகட்குமுன் செல்கின்றனவோ நாம்செல்கின்றோமோ எனச் சொல்லி மழையை வருஷிக்குமாயி னின்னு மற்றைய வளங்களைச் சொல்லவுமெளிதோ? இஃதிங்ஙனமிருக்க விப்பதியானது சுரங்கபூமியானதாலும் நவரத்தினக் கற்களுக்கும் முத்துக்களுக்குந் தாய்வீடாகையாலும் எங்கெனும் அழகன் மயமாய் விளங்குவதனாற் பொழுதுவிடிதலும் புலர்தலும் விளங்காமை நோக்கித் தாமரைத் தடாகங்களேற்படுத்தி யத்தாமரை மலர்கட் குவிதல் விரிதல் முதலிய அறி குறிகளாலும் பின்னும் மற்றையக்குறிகளாலு மறிவர். பின்னும் பலர் காலையிலொன்றாவர் கடும்பகலிலொன்றாவர், மாலையிலொன்றாவர் மனிதரெல்லாம்..." என்பதுபோலு மவ்வவர்கள் முகங்களாகிய தாமரைமலர்களா லறிவர். அங்கடர்ந்த சோலைகளினிடத்துள்ள வண்டினங்கள் சிங்காரம்பாடி வாசனைச்செறிந்தமலர்களிலுள்ள மதுவையுண்டு வெறிகொண்டிருக்கவும், தெருக்களிலுள்ளோர் "...இவ்வளவேனுமன்ன மிட்டுண்மின்..." என்னு முதுமொழி மேற்கொண்

டாராய்'யாசகர் யாவரேனு முண்டோஎன்று சங்க மூதிவருவதை நோக்கி
ன்'மேற்கூறிய வண்டுகட் பாடிய ரீங்காரத்தை (*phonograph*) போனோகிராப்
என்னுங் கருவிக்குள் ளடைத்துத் திருப்ப பாடவிடுவது போற் றேன்றும்.
அன்னைப்பாடாக்கிடக்குங் குயிலினங்கள் நமதுஓசையை வெல்லுகின்றனவா
என்றுமவுனமாய்க்கிடந்து அச்சங்கத்தினேசையைக் கவனிக்கு மயிற்கூட்
டங்களோ! தங்களினங்களில்பாரம்பரையாக (சகலவுயிர்களையுங் காப்போன்கி
ருஷ்ணவதாரமாய் வந்தகாலத்தில் 'புள்ளாங்குழலூதிப் பசுக்கூட்டங்க
ளைச் சேர்ப்பாரெனச்) சொல்லிக்கொள்வார் ஞாபகத்திற்குவந்து இவ்வோ
சையுப்மேற்படியாரூதுவதுதானே என்று பிரமிக்கும் பசுக்கூட்டங்களுமேற்
படியே கவனித்து சுற்றுமுற்றும் பார்க்குமிவைகளை விஷ்ணுக்கடவுளு மறி
ந்து புன்னகைக்கொண்டவைகளின் மத்தியில்பிரசன்னமாவர்.இத்தலத்தினது
வளங்களை யெவ்வளவு நாட்கள் சொன்னலுந்தீராத இப்பதிக்கு கோகன்கபுர
மென்று பெயர். இப்பதிக்கு அந்நியமாயிருப்பவர்கள் தங்கள் தேயங்களி
லில்லாதப் பொருட்களை யிங்குவந்து விலைக்குக் கொண்டுபோவார்களேயொ
ழிய விந்நாட்டார் அவர்களண்டை வாங்கவேண்டிய தொன்றுங்கிடையாதன
வாய் ஏனையசகலமன்னர்களாலும் புகழ்பெற்றிருந்தது. ஒவ்வொரு வீடுகளி
லும் அவ்வவர்செய்யும் நன்மைகளெல்லாம் அணுத்திரள் அணுத்திரள்களாக
ஒன்றுசேர்ந்து மேகக்கூட்டப்போல் ஒருருக்கொண்டு அத்தேயத்தைக் கவ
ந்துகொண்டிருக்கு மிந்தப்பதியின் கோபுரவாயிலண்டையிருக்குந் துஜஸ்தம்
பத்தில் கட்டப்பட்டமணிகள் காற்றினலசையும்போது ஜயமேஜயம் என்ற
டிக்குஞ் சத்தமானது கைலாயத்திற்கும் கேட்குமின்னுட்டை சவுந்தரகேசரி
என்னும் அரசன்தம் பத்னியாராகிய காஞ்சனதேவியரோடு இனிய செங்கோ
ல்புரிந்து அரசாண்டுவருகையில் தங்களுக்கு வெகுநாளாக புத்திரப்பேறில்
லாததுநோக்கி, தாங்களியற்றிய தவவிரதங்களள விடந்தக்கதன்று. செய்யாத
காரியமேதேனுமுண்டோ ? சகலதானங்களைச் செய்தும் நாம் முன்செய்த
வினையென்னவோ வென்றுதத் தமக்குள் சிந்தித்துவாளாவிருக்க வொருநா
ளிருவரும் போஜனமுண்டு சுப்விஷயங்களைப் பேசிக்குலாவிக் கொண்டிருக்
கையில் அரசன் காஞ்சனதேவியாரை நோக்கி எனதன்புக்கிசைந்த நாயகி
" நல்லஞாலமும் வானமும்பெறினும், எல்லாமில்லை யில்லில் லோர்க்கே "
அதாவது பூவுலகத்திலே கீர்த்தியுடன் சகல சம்பத்துக்களையும்பெற்று தவத்
தினலே மேலுலகத்தையுஞ் சொந்தமாகக் கொண்டாலும் மனைவியில்லாதிரு
ந்தால் அவைகள் பிரயோசனப்படாது என்பதாகயாம் சகலபாக்கியங்களை
ப்பெற்றும் பயன்படாதெனக்கருதி, யும்மைத்திருமணம்பேசி விவாகமுடித்
தோம். அந்தோநம்முடைய பரிதாபநிலையைக் கவனிக்கவும் போமோ ?
"...கலகலெனப் புதல்வரைப் பெறுவீர் காப்பதற்கும் வகையறியீர் கைவிட
வுமாட்டீர்..." என்பதாகப் பிள்ளைகளைக் காபாற்ற வகையற்றவர்கள் அதிக
மாகப் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளு கின்றீர்கள் என்றல்லோ பெரியோர்
கூறியிருக்கின்றனர். நமக்குஒரு குழவியிருந்தால் அக்குழந்தைக்கு ஒவ்வொ
ருவேலை செய்வதற்கும் ஓர் ஆள்வைத்தல்லோ பாமரிக்க நமக்குத் திறனு
ண்டு? அப்படியிருக்க நம்முடைய சம்பத்தும் நம்முடைய புகழும் செல்வமொ
ன்றில்லாதிருப்பதினல் நமக்கு என்னபலனுடையது? வானுட்டிலும் நமக்கு
இடங்கிடையாதன்றோ? இதைப்பற்றி நாம் சற்றேனுங் கவனியாதிருப்பது
தகுதியாமோ? ஒருவேளை சம்போகச் சம்பந்தத்திலேதேனுங் குறையோ?
தெரிவிப்பாய் சகியே என்ன அவ்வரசி செல்லுவாள் (தொடரும்,)

P. முனிசாமி.

உ

சிவமயம்.

சித்தாந்தப்பிரகாசம்.

முதல்வன் வணக்கம்.

எப்பெரிய ரும்பரவும் பலகலைவே தாகமத்தி னிதயத் துற்ற
முப்பொருளி னுண்மையினை யத்துவித மெய்கண்டான் மொழிந்த வண்ணம்
ஒப்புயர்வில் லாவிறைவன் றிருவருளே தாரகமென் றுளத்தி னுன்னிச்
செப்புவனற், சித்தாந்தப் பிரகாசந் தமிழுலகிற் செழிக்க மாதோ.

பாசவிலக்கணம்.

பாசமைந்துவகைப்படும். அவற்றுள் அறியாமை மிகவுண்டாம்படி
யான்மாக்கடோறுஞ் சகசமா யனுதியாயிருக்கும் ஆணவமலம் ஒன்று. இந்த
ஆணவமலத்தோடுங் கூடிநின்று அதுபக்குவமாமளவும் ஆன்மாவை மறைத்து
அந்தமலத்தைப் பாகம்வருவிக்கின்ற திரோதமலம் ஒன்று. ஆன்மாக்களுக்
குத் தனுவாதிகளைக் கொடுத்து மயக்கத்தைச் செய்யும் மாயாகாரண லம்
ஒன்று. ஆன்மாக்கடோறும் விரிந்தனுபவமாய்நிற்கும் கன்மமலம் ஒன்று.
ஆன்மாக்களின் சுகதுக்க விளைவுகட் கெல்லாம் இடமாய்நின்று அவற்றின்
அறிவு இச்சை செயல்களை ஏகதேசப்படுத்து மாயாகாரியமாகிய மாயேயம
லம் ஒன்று.

ஆணவமலம்.

எண்ணிறந்த ஆன்மாக்களுடன் கூடிநின்று மறைந்துந் தானொன்றாயிரு
ப்பதாய், ஆன்மாக்களுடைய பக்குவா பக்குவங்கட்குத் தக்கதாக அவரவ
ரிடங்களிலே மறைந்துநின்று, அந்தவான்ம போதங்களின் மீட்சியிலே நீங்
குவதாயிருக்கிற தன்காரியமான வெண்ணிறந்த சத்திகளை யுடையதாய்,
செறிந்த இருளென்னும்படிநின்று ஆன்மாக்களுக்கு மிக்கமறைப்புகள் செய்
வதாய், செம்பினுடன் கூடியிருக்கப்பட்ட காளிதமானது அந்தச் செம்பு
ளவன்றே யதனை மறைத்து உள்ளும் புறம்புங் கலந்து வெட்டுவாய்தோ
நின்றாற்போல, ஆன்மபோதத்தோடுங்கலந்து மறைந்துகேவலத்தில் ஆ
கசத்தியானும், சகலத்தில் அகோகியாமிக சத்தியானும், அஞ்ஞான ங்கஞ்ச
சிக்குக் காரணமாய்நின்ற அனுதிமலமாய் ஆன்மாவின் இச்சாஞானக் கிரி
யைகள் சற்றுஞ் சீவியாதபடி மறைத்து நிற்கும். இம்மலம் ஆன்மாவினு
டைய ஞானசத்தியை மறைத்தலால் சகசமேயாம். ஆகந்துகமலமன்று. சக
சமாவது கூடவுதித்தது. ஆகந்துகம் வந்துகூடியது. சகசமெனின் அக்கினிக்
கு வெம்மையும் புனலுக்குத் தண்மையும்போலும். குணமாதலிற் குணமழி
யிற் குணியுமழியுமன்றேயெனின் அற்றன்று. செம்பிற்குக் களிம்பும், அரிசி
க்குத் தவிடுப்போலுங் குற்றமே அவற்றின் குணமன்று. களிம்புந் தவிடும்
போகச் செம்பிற்கும் அரிசிக்கும் கேடில்லை. அதுபோலச் சகசமலமான
ஆணவமலத்தை நீக்கக்கேடின்று. ஆதலால் சகசம் இருவிதமெனக்கொள்க.
இவ்வாணவமலம் மாயாகாரியமெனின், மாயாகாரியம் ஆகந்துகமாகலின்
ஆகாது. மாயையெனின் மாயைதன்காரியத்தினாலே மலத்தைநீக்கி ஆன்மா
வினுடைய ஞானத்தை விளக்குதலின் அதுவுமன்று. மாயைதன்காரியத்
தால் விளக்கினும் காரணரூபத்தான் மறையாதோவெனின் காரியத்திலில்
லது காரணத்தினுமில்லை, அக்கினிகாரியமான தீபத்தாலும் விளக்கிக் காரண

மானதன்றாலும் விளக்குதலின். ஆயின் மாயை காரணரூபத்தால் விளக்குமோவெனின் அப்படிவிளக்காது. ஆன்மாக்களை விஷயங்களிலே மோகிப்பிக்கும். ஆணவமலம்போல முழுதுமறையாது. ஆதலான் ஆணவம் இருளும், மாயை விளக்கும்போலுமெனக் கொள்க. ஆயின் இதனை மலமென்பதென்னையெனின் ஆன்மாக்களுடைய ஞானக்கிரியைகளை மறைக்கையினாலே மலமென்பது அநுமதம். மலம் அழுக்கு. இனி ஞானபாவம் எனின் அபாவமொருதிரவிய மல்லாதபடியினாலே மறைக்குந்தொழிலைச் செய்யமாட்டாது. கடத்தினுடைய அபாவம் சலக்கிரணம் பண்ணமாட்டாமைபோல. ஆதலால் ஞானபாவமுமன்று. ஞானத்தினுடைய பிராகபாவம் எனின் பிராகபாவமநாதியான ஞானத்தான்முடிவு ஆதலால் முடிவுள்ளதற்குத் தோற்றமுண்டு உண்டாகவே தோன்றி யழியுமாதலான் அதுவுமன்று. அந்நியதாஞானம் எனின் ஒன்றை யொன்றாகக் கருதுதலே அந்நியதாஞானமாதலின் அம்மாருட்டமோ ஏதுவின்றிவாராது. சுத்திவெள்ளியாகத் தோன்றும்போது கண்ணின் குற்றத்தாலன்றித் தோன்றாதவாறு போலாதலின் இதுவுமன்று. இனி ஆன்மாவின் குணம் எனிற் சித்தான வான்மாவின்குணம் ஞானமன்றிச சடமாயிராது. தீயின்குணம் வெம்மையன்றிச் சீதமாகாதவாறுபோல வாதலால் அதுவுமன்று. இவ்வாணவமானது பசுத்துவம், பசுங்காரம், மிருத்தியுமூர்ச்சை, மலம், அஞ்ஞானம், அவித்தை, ஆவிருதி, ருக்கு, கிலானிபாவம், மூலம், க்ஷயம், பாசம், அசுத்தி, பெந்தனம், வியாகாதம், களங்கம், மோகம், கேவலம், ஆவரணம், தமசு, சடம், படலம், திரோதம், ஆச்சாதனமுதலிய பெயர்களைப் பெறும். இம்மூலமலம் ஆன்மாக்களுக்குக் கருவிகூடிய சகலாவத்தையிலே அராகமுதலிய கருவிகளிலே யாவேசித்து மோகம், மதம், அராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், அரிஷம் என்னும் எழுவிதங்களையுஞ் செய்விக்கும். இவற்றுள் மோகமாவது அதிபாதகமுதலிய பஞ்சபாதகங்களை ஆசிரியராலுணர்ந்திருப்பினு மவ்வுணர்ச்சிகள் சிறிதும் விளங்காதபடி மிழப்பித்து அவற்றை நன்றென்று செய்விப்பது. மதமாவதுதான்மோகித்துப் புணர்ந்த வரைவின்மகளிரை அருவருக்காமற் பார்த்து இவள் திவ்விய ஸ்திரீயென்றும் இவளின் அறியபேறெமக்கில்லை யென்றும் மதிப்பிப்பது. விஷாதமாவது ஒருவன் வாஞ்சித்துப் புணர்ந்த மகளிரைப் பிரிந்தபோது மிகவும் வருந்தியழும்படி மனோதுக்கஞ்செய்விப்பது. அராகமாவது ஆசிரியனாலே தருமநூற்களைக் கேளாதானொருவனுக்குச் சிவத்திரவிய முதலியவற்றை வவ்வுதற்கு வாஞ்சையைச் செய்விப்பது. சோஷமாவது அந்தமனோதுக்கத்தாலே யுடம்புலரும்படி ஆகாரத்திலே கருத்தின்றிச் செய்விப்பது. வைசித்திரியமாவது நமக்கு முதல்வன் நானாவிதமான இருவினைப் பயனையும் தெய்வீகமுதலிய மூவகையாலே தருவனென்னு முணர்வையிழப்பித்து, இவனென்னைத் தாழ்வித்தான் வாழ்வித்தான் யானிவனைத் தாழ்வித்தேன் வாழ்வித்தேனென்பிப்பது. அரிஷமாவது மனைமுதலிய வளங்களைக் கண்டு களித்து எமக்கு இனியென்ன குறையென்பிக்கை. அநாதியிலே ஆன்மாக்களை அணுத்தன்மைப் படுத்திநிற்கையால் ஆணவமெனப் பெயராயிற்று.

திரோதானமலம்.

அருட்சத்தியானது ஆன்மாக்களோடுநின்று அந்த ஆணவமலம் பக்குவமாம்படி அதனோடுங் கூடித் திரோபவித்துநின்று காரியப்படுத்தலின் மலமென வுபசரிக்கப்படும். இங்ஙனமறைத்தற் கனுகூலமான இம்மலந்தானே முதல்வன் திருவடிகளை ஆன்மாக்கள் சேரும்படி பக்குவம் வந்துழிப் பண்ணிநிற்கும்.

மாயாமலம்.

மலகன்மங்களுடன் விரவாது சுத்தகாரிய பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது சுத்தமாயை. இம்மாயையின் கீழாயடங்கி மலகன்மங்களுடன் விரவி சுத்தாசுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது அசுத்தமாயை இவ்வசுத்தமாயையின் தூலபரிணாமமாய் அசுத்தகாரிய பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது பிரகிருதிமாயை,இவற்றிற்கு முறையேவிந்து, மோகினி, மான் எனவும் அழைக்கப்படும்.

சுத்தமாயையின்தோற்றம்.

இச்சுத்தமாயை முதல்வனுக்கு இலயபோக அதிகார மூன்றுக்கும் இடமாய் சுத்தமாய்ச் சடமாய் அவனுக்குப் பரிக்கிரக சத்தியாய் நித்தியமாய் மேலானகாரணமாகையால் ஒன்றாய் சுத்தாசுத்தமான தத்துவ தாத்துவிகமிரண்டினும் வியாத்தமாயிருக்கும். இதில் முதல்வன் தாதான்மிய சத்தி யதிட்டிக்கையினாலே சிவமுதலிய தத்துவங்களைந்தும், கலையைந்துந்தோன்றின. எங்ஙனமெனின் ? ஞானசத்தி யதிட்டானத்தாலே சிவதத்துவமும், கிரியாசத்தி யதிட்டானத்தினாலே சத்திதத்துவமும், இவையிரண்டும் சமமாகவதிட்டித்தபோது சதாசிவதத்துவமும்,ஞானங்குறைந்துகிரியையதிகமாகவதிட்டித்தபோது ஈசுரதத்துவமும், கிரியை குறைந்து ஞானமதிகமாக வதிட்டித்தபோது சுத்தவித்தியாதத்துவமும், தோன்றும்.

(இன்னும்வரும்) சித்தாந்தசரபம்

மஹா

* பரி நிருவாணம்.

† மஹா பரி நிருப்பாணங்.

எங்குநோக்கினும் எக்காலத்திலும் சாந்தமும், ஈகையும், அன்பும் இயற்கையாயுள்ளதே அதன் தருமமாகும் இந்தமூன்று பாவனைகளை ரூபிப்பதற்கு உபமேயங்கிடையா. நிருவாணமென்பது சகலருக்கும் பொதுவாகவும் ஒரே நிலையுள்ளனவாகவுமிருக்கின்றது. ஒருவன்நிருவாணம் எத்தன்மைத்து என வுசாவுவானாகில் இத்தன்மைத்து என ரூபிக்கப் பாங்கின்மையால் மௌனமே யதற்கு மாறுத்தரமாம். ஏனெனில் ஒப்பு உவமையற்றதே அதன் உள்ள சுபாவம். ஆனால் கூடியவரையில் விளக்குவோம்.

நிருவாண விளக்கம்.

காமலோக, ரூபலோக அரூபலோகமென்னும் காரணகாரியங்கள் எதுக்குத் தக்க நிகழ்ச்சியாதலால் உபமேயமின்றி சூட்டிற்குக் குளிர்ச்சியும், இருட்டிற்கு வெளிச்சமும் வியாதிக்கு ஔடதமும், துக்கத்திற்கு சுகமும்; மாறுபட விளங்குவதுபோல் உலகபற்றுதலுக்கு பிறப்பும், உலகபற்றற்றலுக்கு நிருவாணமுமாகையால் அவற்றை சாந்தம் ஈகை அன்பெனும் மூன்றின் பெருக்க விளக்கத்தால் உணரவேண்டும்.

---

* சமஸ்கிருதம் † பாலி

இவ்வகை உணர்ச்சியில் அநித்தியத்திற்கு நித்தியம் முன்னிலையாவது போல் அநித்திய துக்கத்திற்கு நித்தியசுகம் இருத்தல் வேண்டும். அநித்திய சுகத்தை யறியவேண்டியவர்கள் புத்தாகமத்தைக்கொண்டு விசாரித்தலே ஒளி தரும். அவ்வகை விசாரியாது தங்கள் மனம்போனவாறு நிருவாணத்தை விசாரிப்பவர்கள் இருளில் நின்றுதவிப்பார்கள். அப்படி தங்கள்மனம்போன போக்கில் நுழையாமல் புத்தாகம நீதிநெறியில் நின்று பஞ்சஸ்கந்தம் விகாரமற்றபடியால் நிர்விகாரியென்றும், பிறப்பு மூப்பு மரணமெனுமூன்று மற்றபடியால் சதாகாலம் அல்லது சதாசிவமென்றும், சகலதுக்கங்களும் நிவாரண முற்றடியால் உலகசிரேஷ்டமென்றும், சூனியமில்லாமல் அசூன்யமானபடியால் ஒவ்வொருவருந்தங்கள் சோம்பலையகற்றி நிருவாண நிலையையடைய முயற்சிக்க வேண்டியது அவசியமாம்.

நிருவாணமென்பது யாது ?

சகல உலகத்திலும் ஆசாபாசப் பின்னலெனுங் கயிற்றால் கட்டப்பட்ட நிலைக்கு வாணம் என்றுபெயர். ஆசாபாசக் கயிற்றை முற்றிலும் அறுத்த நிலைக்கு நிருவாணமென்று பெயர்.

பிராக்கிருத பாஷையாகும் பாலியிலுள்ள பிடகத்தின் நிப்பாண சூத்திரத்திய மேற்கோள்.

“ யோசோ சப்பசங்கார
சமத்தோ சப்புபதிபட்டினி
சக்கோ தன் அக்கயோ
விருஹோ நிராதோ நிப்பாணங் ”

சிரேஷ்டதருமத்தினால் சகல பிறப்பின் காரணங்களையும் தவிர்த்தலே நிருவாணம். மாறி மாறி பிறக்கும் பிறப்பை அறுக்கும்தருமமே நிருவாணம். காம ஆசையின் உபத்திரவம் எந்ததர்மத்தால் விலகுகின்றதோ அந்த தருமமே நிருவாணம். நூற்றெட்டு வகையாகும் ரூப ஆசைகள் எந்த தருமத்தினால் நசிகின்றதோ அந்தநிலையே நிருவாணம். பஞ்சபுலன்களால் பற்றும்காமியத்தை எந்த தருமத்தால் பற்றறுக்கப்படுகின்றதோ அந்ததருமமே நிருவாணம். சமுசாரமென்னும் வீட்டில் கிலேசமென்னும் பூட்டிட் டிருப்பதை உடைக்கக்கூடிய தருமம் எதுவோ அதுவே நிருவாண மென்னப்படும்.

நிருவாண இலட்சணம்.

இராஹதுவேஷ மோஹமென்னும் குலேச அக்கினியை தணித்து சாந்தமுற்று சமுசார சாகரத்தைக் கடந்து நிற்பதே நிருவாணத்தின் முதல் இலட்சணம்.

குலேசங்களாகும் அக்கினியில் பொறிந்துகொண்டிருக்கும் வாதையை தணிக்கும் குளிர்ந்த நிலையாகிய தண்மையே நிருவாணத்தின் இரண்டாம் இலட்சணம்.

நிருவாணத்தின் கிருத்தியம்,

சாந்தநிலையே எக்காலத்தும் மாறுமலும் மற்றொன்றில் சேர்க்காமலும் நிற்பதே நிருவாணத்தின் கிருத்தியமாம்.

க. அ. பட்டாபிராமன்.

ம னோ ன் ம ணி.

முதல் அத்தியாயம்-காரிருட்கானம்.

பிறர் வாழ்வைப் பொறுது, புறங் கூரித்திரியும் அற்பர் மனமென இருண்டதோர் அரண்யத்தில், திவ்ய தேஜசோடு விளங்கும் இளவல் ஒருவன், அவதிவயத்தனாய் அலைந்து திரிந்தனன். பொழுது சாயங்காலமாயிற்று. செவ்வானத்தின் சிறப்பினைச் சிந்திக்க அவற்கு அவகாசமில்லை. மலைக்காட்சி, மலையருவிக்காட்சி, மலர்க்காட்சி, மலர்க்கொடிக்காட்சிமுதலியஇயற்கையின் அருங்காட்சிகளை, யவன் கண்ணிருந்துங் காணுதொழிந்தான். ஆயினும், வனவிலங்குகளின்உறுமல் குமுறலும் அவன் சிந்தையை யசைத்ததின்று. இரவி மறைந்தபின், ஆண்டுஆட்சியெய்திய காரிருட் கூட்டமும் அவனது மனசைக் கலக்கியதில்லை. தீரமே உருவெடுத்துப் போந்ததெனத்தோன்றும் நங்குமரன் அறியாதொழிந்தது அஞ்சுதல் என்பதொன்றே. மற்று: அவனைத் துன் புறுத்தியதியாதுகொல்? அஃதியாதென் றுணர்ந்து கோடற்கு அவன் றன் தனிமொழிகளுள் சிலவார்த்தைகள் அறிகுறியாய்த் தோன்றின.

ஒவ்வோர்சமயம் "ஹே! பரமசிவா! ஈதுன்னருளோ" வென்பான். ஸ்ரீராமபிரானை யொத்தாரும் பிதுர்வாக்ய பரிபாலனஞ் செய்வான் நாட்டை விட்டுக் காட்டையடைந்தனரன்றே! யான் சொற்பிரயோசனங்கருதி தந்தை சொற்றட்டி நடத்தல்நேரிதோ என்பான். ஏனை யின்றுளை யேங்கவிட்டு, யான் தேசசஞ்சாரஞ் செய்யப்புக்கதழகி தழகிது. எனது தச்கஹ்ருதயம் இன்னும் பிளந்தொழிந்ததின்று. புல்லறிவாளன் என்னையும் பொருட்படுத்தி லீலாவதி ஆரிய! அன்ப! கணாள! என்றழைத்தனளே. எனப்பல கூறி நெடிதுயிர்ப்பான். மிகவியர்ப்பான். ஒரேவழிதன்னைத் தானேவிளித்து, ஹே! க்ஷத்திரியாதமா! குலாந்தகா மானிடப்பதரே! இருமுது குரவர்தம் நெஞ்சம் சுட்டபாதகா நின்சென்மம் பாழ்த்தது! நின்னறிவும்பட்டது! நின்வாழ்வுவெந்தது. நிரயம் வாய்பிளந்து நின்வரவை எதிர்பாராநின்றது, அச்சோ அந்தோ! அம்மம்ம! கொடுமை! கொடுமை! என்று இன்னணம் கோபித்துக் கூறுவான்.

மீண்டும் "ஈசா! ஜெகதீசா! சர்வேசா! யாவு நின்றிரு விளையாட்டே! யாரே உன் அதிரேக மாயை யறிவார்! நீ ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே! ஆடுகின்றவனும் ஆடல்கண்டவனும் நீ! ஒன்று நீயில்லை, யன்றியொன்றில்லை! அகில நாயகனே ஆதியந்த மில்லாதவனே! ஈறிலின்ப மூர்த்தியே! உள்ளுவாருள்ளத்தூறுமொரு தெள்ளமுதே! ஐந்தவித்தவர் தம்அரும்பெறன் மணியே! ஒப்புயர்வற்ற நற்பொருளே! ஒதியோதி யுணருந்தொறுமுணர்ச்சி யுதவு மொண்சுடரே.

"கடலமுதே தேனேயென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார்நீ பராபரமே!
பாராயோ வென்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.

ஓயாதோ வென்கவலை யுள்ளே யானந்த வெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே?
கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் பராபரமே.

எண்ணாத வெண்ணமெலா மெண்ணி யெண்ணி யேழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே
நீங்காத வின்ப நிறைவே யெனையருளித்
தாங்காய் நீ யிந்தத் தருணந் தயாகரனே."

அம்மையப்பா அபயமபயம். தீனனேற்கு விழித்துணை மருந்தாய் வருக! கண்ணா வருக! முக்கண்ணா வருக! கண்ணே வருக! மணியே வருக. மெய்யே வருக! வாழ்வேவருக! என்றலறுவான்.

பூவுலகிற் போந்தகொரு புத்தமுதே—என்னுயிர் காக்க. வந்த இளங்குயிலே—உருக்கைக் காய்ச்சி யூற்றியதுபோல நிழலும் நீரும் இல்லாத அழல் வெங்காட்டிற் போந்தபோதும் என்னையே மறந்தேன்! நின்னைமறக்கிலேனே- என்னுடைய கிள்ளையே எனைத்தேடித் திகைப்பாயோ? திங்களே புனமுகம். தெள்ளமுதே தேனே—சங்கமேநின்களம். நீலமெனுங்கோல விழித் தையால்! காந்தளே நின்கரம். கைம்மா தங்கமெனுந்தனத்தாளே.

சிந்திக்கத் தித்திக்குந் தேனே
வேதச் செம்பொருளே—கண்கவலைப்
படமுடியாதையரீ எனைக்காத்தருள்க!—

என மீண்டும் உரைத்துக் கவன்றான்—

அநாதிமுக்த சித்ருப சதாநந்த சாக்ஷாத்கார சதா சிவ கிருபையை யுன்னி மனமொழிந்து நின்றான்.

கள்வர் நாற்பதின்மர் ஆண்டுத் திடீரெனக் கோடை யிடியிடித்தன்ன சப்தத்துடன் தோன்றினர். தந்தலைவன் புகழை வாயாரப்பாடினர், ஆடினர். கட்குடித்துக் கண்ணிருண்டு காமுற்று, உடன் வந்த தந்தம் தேவியரோடு கேளீ விலாசம் கண்டார். ஒருத்தியை யடைய மூவர் வழக்கிட்டார். இன்னொருவன் நாளை யொருவன் பிற்றை நாளொருவனாக யிவளை யடைமின் எனத் தலைவன் வழக்குத் தீர்த்தான். அங்கே ஐவர் கதை படித்தோமே, இங்கே மூவர் கதைப் படிக்கலானோம். தலைவன் மாத்திரம் கட்குடிப்பதைத் தவிர்த்து மிதவுணவுண்டு நாற் புறமுஞ் சுற்றிப் பற்றிப் பார்த்து வரும்போது ஒரு வில்வ மரத்தடியில் நம்மிளந் தோன்றலைக் கண்டு பிரமித்து நின்றான்—

அப்போது, பசிநோயாலடைந்த களைப்பால் அயர்ந்து நித்திரைபோன நமதிளஞ் சிங்கம்ஸ்வப்நாவஸ்தையினும் வாய்விட்டு இன்னணம்அரற்றினன்.

அடீ! லீலாவதி! உன் முகமதியின் அமிர்தத்தை யுண்டு யான் உயிர் தரிப்பதெண்ணாளோ?

கள்வர் தலைவன்—ஆ! லீலாவதியா! என் கண்மணியா! அந்தோ! என் பெண்மணி யுயிர்த்திருக்கின்றனளா? (தலைவன் குரல் கேட்டலறி யெழுந்த) விடலை—ஆ! கனவா! நனவா! ஐய, நீயிர் யாவர்! லீலாவதியைப் பற்றிக்கவல்கின்றீர். அவளை நீர் அறிவீரோ.

தலைவன்:—நீர் வாரும். பசிப்பிணி நீக்கியபின்னர்பேசுவீர் அஞ்சற்க. யான் உமக்கு நன்மையே செய்வல். நீர் ஓர் அரசன் மகன்போலிருக்கின்றீர் ஆயினும் பிற்பட்டுப் பேசுவோம். என்னுடைய பாசறை (Tent) க்கு வாரும். (இருவரும் போகின்றனர்.)

V. M. சுவாமி B. A.

பிராணிகளும் சங்கீதமும்.

ஜீவசிருஷ்டிகளில் சகல பிராணிகளையும் மகிழச்செய்து உற்சாகப்படுத்தி அவைகளின் மனத்தை வசியப் படுத்துவது சங்கீதமே. ஸ்ரீ 'கிருஷ்ண பகவானது வேணுகானத்தாலும் ஆனய நாயனாரது பஞ்சாக்ஷர கானத்தாலும் அத்திமுதல் எறும்பீருகவுள்ள சகல ஜீவராசிகளும் ஆநந்தபரவசமடைந்து சிறிதும் அசைவின்றி ஸ்தம்பிதமாய் நின்றன வென்பது யாவரும் அறிந்தவிஷயம். ஒருகால் இவை புராணவிஷயங்களென்று இக்காலத் தவர்களிற் சிலர் அசட்டைசெய்யலாம். அப்படிப்பட்டவரும், நம்நாட்டிலில்லாமற்போகவில்லை. அவர்களுக்கு இதன் உண்மையைச் சிறிதுவிளக்கிக் காட்டுவோம். மானிடரைப்போலவே மற்றைப் பிராணிகளுஞ் சங்கீத ஆனந்தத்தை அனுபவிக்கின்றன என்பதற்குப் பலதிருஷ்டாந்தங்களுண்டு. ஜீவசிருஷ்டிகளில் மானுடனுக்கு அடுத்த நிலைமையிலுள்ளது மிருகம். மிருகங்களிலெல்லாம் பெரியது யானை. அவ்யானை சங்கீதத்துக்கு வசப்பட்டு ஆநந்தம் அனுபவிப்பதை பர்மா, சியம் முதலிய கீழ்நாடுகளிற் காணலாம். அத்தேசங்களில் யானைகளை வாத்தியகோஷத்துக்குத் தக்கவாயாகும் வண்ணம்பழக்கியிருக்கிறார்கள்.

அவை அவ்வாத்திய கோஷங்களைக்கேட்டு ஆநந்தத்தாண்டவ மாடுவதைப் பார்க்க வியப்பாகவிருக்கும். குதிரை, மாடு, ஒட்டகை, மான், கரடி, குரங்கு, புலிமுதலிய மிருகங்களுக்கும் சங்கீதஞானமுண்டு. குதிரைப் பட்டாளம் யுத்தத்துக்குச் செல்லுங்கால் எக்காளமுதலிய யுத்தவாத்தியங்களின் கம்பீர ஓசையைக்கேட்டு உற்சாகமடைந்து வேகமாய்ச்செல்லுவதுமன்றி இரணகளங்களில் அவ்வாத்திய கோஷங்களைக்கேட்டு மனமகிழ்வதைப் பட்டாளங்களில் அநுபவமுள்ளவரெவரும் அறிவார்கள். மாடுகளை மந்தை மந்தையாய் மலைமேல் மேய்ச்சலுக்கு ஓட்டிக்கொண்டுபோகும் கோபாலர்கள் புள்ளங்குழல் வாசித்துக்கொண்டே முன்செல்ல அவர்கள்பின்னே அம்மாடுகள் அத்தீங்குரலைக்கேட்டு ஆநந்தித்துச் சிறிதும் களைப்புத் தோன்றாமல் மலைமேல் ஏறுவதின் அழகையும் அவ்வாறே சூரியாஸ்தமனத்துக்குமுன் அவைகள் நானாவித மணிச்சத்தங்களுடன் இறங்கும் அழகையும்இன்றும்மலைப் பிரதேசங்களில் நாம்பார்த்து மகிழலாம்.

பாரவண்டிகளிழுத்துச் செல்லும்மாடுகளுக்குச் சிறிதும் தேகச்சிரமம் தோன்றாவண்ணம் வண்டிக்காரர் உத்சாகத்துடன்பாடும் இனியதென்பாங்குப் பாட்டைக்கேட்டு ஆநந்தத்துடனும், ஊக்கத்துடனும் அம்மாடுகள் செல்வதை யறியாதவருமுளரோ ? சிறிதும் புல்பூண்டற்ற மணல்வனாந்தரங்களில் நெடுநாள் அன்னபானாதிகளின்றிப் பிரயாணஞ்செல்லும் ஒட்டகைகள் அராபியர்களின் இனியபாடல்களைச் செவிசாய்த்துக் களிப்புடன் கேட்டுச் செல்லுவது உலகபிரசித்தம். வனத்தில் வேடர்களாட்டும் மணியோசையைக் கேட்டு மதிமயங்கிக் கிட்டிச் சென்று அன்னவர் வசப்படும் மான்களும் கானத்துக்குக்கட்டுப்படுகின்றன. புலிமுதலிய துஷ்டமிருகங்களும் வாத்தியங்களுக்கு வசீகரமாய் சகலதுர்க்குணங்களும் நீங்கி நாய்போற் சாதுவாய்நடிக்கின்றனவென்பதை மிருககாட்சிச் சாலையிற் பழகுவோர் கூறியிருக்கின்றனர். கரடிக்காரர் கையில் உடுக்குவைத்து அடித்துக்கொண்டு அக்கரடியை ஆட்டிவைப்பதையும், அவ்வுடுக்கோசையின் இனிமைக்குத் தக்கபடி அக்கரடி நடித்துக் காட்டுவதையும் நாம்பலமுறை பார்த்திருக்கின்றோம். குரங்குகள் பாட்டுக்கேட்டு மகிழ்ந்து சிரக்கம்பஞ் செய்வதைநாம் தெருவில்பார்த்த

வண்ணமாயிருக்கின்றோம். இவ்விதம் பற்பல மிருகங்கள் சங்கீதஞானமுடையன என்பது தெளிவாகின்றது. இனி மிருகங்களுக்கடுத்த நிலைமையிலிராநின்ற பறவையினத்தைப்பற்றி ஆராய்வோம். மிருகங்கள் சங்கீதத்தைக் கேட்பதால்மட்டும் ஆநந்தமடைகின்றனவேயொழிய, தாம்பாடிபிறரைக்களிப்பித்ததாக நாம்பார்த்தோமென்றாவது கேட்டோமென்றாவது சொல்லமுடியாது. பறவையினங்களோ இவ்வாறின்றித்தாம் பிறர்பாடக்கேட்டு மகிழ்வதல்லாமல் தாமும் இனிய குரலுடன் பாடி மற்றைப்பிராணிகளுக்கும் பரமாநந்தத்தை யுண்டுபண்ணுகின்றன. பெரும்பறவைகளைப் பார்க்கிலும் சிறுபறவைகளே அழகாய்ப் பாடுகின்றன. அவைகளின் தொண்டை யமைக்கப்பட்டிருக்கிறவிதம் அற்புதமானது. குயில் பஞ்சம் சுவரத்துடன் இனிமையாய்க் கூவுவதும், வானம்பாடி விடியற்காலம் நிர்மலமான ஆகாயத்தில் ஓங்கிப்பறந்து பாடுவதும், அன்றில் இணைபிரியாவண்ணந் தன்பேடைக் கூவியழைப்பதுவு மனோகரமா யிருக்கும். மேகமுழக்கத்தைக்கேட்ட மடமயிலும் ஆர்பரித்துத்தன் அழகியகலாபத்தை விரித்து ஆநந்தக்கூத்தாடுவது அற்புதமாயிருக்கும். ஆற்றங்கரையோரங்களிலுள்ள அழகிய உத்தியானவனங்களிலும், ஓங்கியுயர்ந்து அடர்ந்து வளர்ந்திருக்கின்ற விருக்ஷஜாதிகளோடு கூடியவனங்களிலும் பைம்பொழில்கள் செறிந்த மலைச்சாரல்களிலும் பற்பல வர்ணங்களையுடைய பலஜாதிபட்சிகள் இனிமையாய்க் கூவிக்குலாவுவதைக்காண மனோரம்மியமாயிருக்கும். மானுடர் ஆலாபனம் பண்ணும்விதமே சிலபக்ஷிகள் இன்குரலோடு நீடித்தநேரங் கூவுவதைக் கேட்டால் பாடகர்பாடுகிறார்களோவென்று மயங்கும்படியாயிருக்கும். பைங்கிளிகளுங், குருவிகளுங், கூட்டங்கூட்டமாய் மரக்கிளைகளிலுட்கார்ந்துகொண்டு மாலைநேரத்து மஞ்சள்வெய்யலில் குதூகலித்து ஆர்ப்பரிக்கின்றதை கேட்கக்கேட்க பிரமாநந்தமாயிருக்கும். மைனாப்பறவைபாடுவதும் பலருமறிந்த விஷயம். இளைஞர் அதன்பாட்டைக்கேட்டு ஆநந்திக்கவே அதனை கூட்டிலடைத்து வைத்துக்கொண்டு வளர்ப்பார்கள். நம்நாட்டுக் கவிஞர்கள் அணிமா அல்லது கேகயப்புள்ளென்ற ஒரு பறவையைப்பற்றிப் புகழ்ந்துபாடி யிருக்கின்றனர். அதனையே கிஞ்சுகப்புள்ளென்றே கூறுவோம். ஜீவசிருஷ்டியில் இப்பறவைபோன்ற நுட்பமானசெவியையுடையது வேறொன்றுமில்லை. மலையின் உன்னதபிரதேசங்களிலுட்கார்ந்து நல்வீணைதடவி நல்ல பண்களை வாசிக்குங்கால் இக்கிஞ்சுகம்பறந்தவண்ணமே ஸ்தம்பித்துக்கேட்டு ஆநந்தித்துக்கொண்டிருக்கும்.

வி. வே. கி. நாராயணசாமி பிள்ளை.

சுவர்ணாப்பாள்.

இவளோர் மடந்தைப்பருவப்பெண். இவள் தென்தேசத்தரசனது பிரதமப்புத்திரி. இவள் ஓர்நாள் முல்லைநிலச்சாரலில், பளிக்குபாறைமணித்தலத்து நீல ஆலவட்டம் விரித்தாற்போல தன் கோலக்கலாவங் கொளவிரித்து முளையிளஞாயிற் றிளவெயிலெரிப்ப ஓர் இள மயி லாடுவது கண்டு நின்றாள். அக்கால் புள்ளிமானை வெருட்டிய வேலா யுதத்தைத் தாங்கிய வனசை வெகுதூரத்திற்போந்த ஓர் அரசகுமாரன் இவளைக்கண்டு, ஓ! இவ ளழகேயழகு!! இவள் தமதுயிர்ப்பாங்கியரின்றி யிவ் விடத்துத் தனியேநிற்குங் காரணமியாதோ! நமக்குண்டாயிருக்கும் வேட்கைநோயைத்தணிக்குங்காரணத்தாலோ? அப்படியானால் இவளை என் கண்ணிற்படச் செய்த தெய்வம் வேறெனக்கென்ன செய்யாதிருக்கும். முன்னொருகாலத்தில் ஸ்ரீகண்ணபிரான் பதினாறாயிரங் கோபிகாஸ்திரிகளிடத்தில் மயக்கங்கொண்டாரே அதைநினைத்து ஸ்ரீலக்ஷ

மிதேவியானவள் தனது நாயகன் தன்னைவிட வேற்றிடங்களில்மனஞ்செலுத்தாவண்ணம்; தான்முன்பிருந்த அழகைமாற்றி யின்னும் பெரிய வழகைச் சுமந்து புவியிலவதரித்து இப்படியாகவந்து நிற்கின்றனளோ! அன்றி வானத்திற் சிறிதுநேரத்திற்றோன்றிமறையும் மின்னலையென்றுசதாபூமியிற்சஞ்சரிக்கவந்தமின்னற்கொழுந்தோ! மற்றுமுள்ளஸ்திரீகளினழகு பகலில்விளக்கேற்றியதுபோலாகும்படி தெய்வலோகத்தினின்றும் வந்த மணி விளக்கோ! உடலுருவந்தாங்கிய பச்சைமயிலோ! அன்றி சந்தோஷமிகுந்துசிறுநடைகொண்ட பெட்டையன்னமோ! அடிதுவக்கி உச்சிவரையிலுமுள்ள எல்லாவிடங்களுங் கொஞ்சங்கூட தள்ளுதற்கிடமின்றி யொரேவிதமாயினிப்பையுண்டாக்குஞ் செங்கரும்போ! மிகுந்தவெயிலைக்கண்டுமுகங்கருகாமலும்,நரம்புகளைச் சிந்தாமலும், வண்டுகளாற் கோதப்படாமலுமுள்ள தேனிரம்பிய பெரியபூமாலையோ! தேவர்களிடத்திற் சோர்வடையாமலும்,தேய்வுபிறையென்பதேயில்லாமலும், புவியெங்கனுஞ் சுற்றித்திரியாமலும், தேகத்துண்முயற்களங்கந்தாங்காமலும், மேகத்தில் மறையாமலுமுள்ளசெழுந்திங்களோ! தேடற்கரிய கருநிறந்தவழு மலையவெற்பிற் பிறவாதும், மன்மதனுக் கிசையாததுமான தென்றலோ! தட்டானிட்ட வுலைக்கண்புகாததும், காய்ந்து உருகாததும், நிறுக்குந் தராசில் வைக்கப்பெறாததும், உரைக்கல்லிலுரைத்து மாற்றுச்சொல்லப்படாததுமான தங்கமோ! உலகில் பஞ்சதருக்களுப விளைதற்கேதுவான வமிர்தகிலமோ! கப்பீரமுள்ள யாவர்க்கும் அருந்துதற் கிசையாதாயினும் பார்வையிலேயே யினிக்கும்பைந்தேனோ! தேவர்களும,பெரிய தவத்தையுடைய முனிவர்களும் இதுதான் நன்றென்று நாள்தோறுங்கற்றுவந்த கலைஞானமோ! ஐயம்பெற்றமன்மதன் பீதியற்றிய காமநூல் வித்தைக்கடங்காமல் வாதுபுரியும் பஞ்சவர்ணக்கிளியோ! ஆதித்தன் கிரணத்தைக் காணாத அழகிய குமுதமலரோ! அன்றி கங்குலையுந், திங்களையுங் காணாத தாமரையோ! எங்கும் நிலவி மோகத்தை மூட்டும் அரம்பை, திலோர்த்தமை, மேனகை, ஊர்வசிமுதலியபெண்களுக்குக்குலதெய்வமோ! கற்கண்டையொத்தமொழியும், சிறுநடையும் பழகுமொருசித்திரப்பாவையெனவந்த மதனரச குளிகையோ! அழகிய தருவினிடத்துப்படராதும், நீண்டவல்லிமலரையேந்தியதும், மேற்கொடி சுற்றாததுமான கற்பகப் பூங்கொம்போ! வடிவினமிக்க பெண்களியாவருஞ் ஜனனமானபோது மண்ணுலகைக் காக்கவென வந்த வமிர்தமோ! பெரியதவத்தையுடைய முனிவர்கள் தமதுஎண்ணத்தைச்சிறப்பிக்கச்செய்த தவங்களை யெல்லாந் துறத்தவந்த பெருஞ்சூழ்ச்சியோ!

இன்னும் வரும்.

குமரவேள்.

தானம்.

இலௌகிகமாகவும் வைதீகமாகவும் அடிக்கடி தானஞ்செய்யவேண்டியது இன்றியமையாததாயிருக்கின்றது. தானத்தில் பிரதிப் பிரயோசனத்தை வேண்டாமல் கொடுக்குந் தானமே சிறப்புடையது. தானமாவது எல்லா ஆன்மாக்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுப்பதாயும் சத்துருக்களை யொ

ழிப்பதாயும் சத்துருக்களை மித்திரராக்குவதாயு மிருக்கிறது. தானஞ் சத்பாத்திரத்திலேயே கொடுக்கவேண்டும். அதிலும் மனக்களிப்போடு தரவேண்டும். தானத்துக்கேற்ற பொருள் கையிலிருந்தும் சமயம் நேரிட்டபோதும் சத்பாத்திரம்வாய்த்தகாலத்தும் கொடுப்பது நன்றென்றுணர்ந்தும் கொடாத உலோபிகள் நரகத்தை யடைவார்கள். ஜன்மாந்திரத்தில் நாஸ்தி நாஸ்தி என்று சொல்லி வழக்கப்பட்டவன், இந்த ஜன்மத்தில் கொடு கொடு என்று சொல்லத்தக்க வறுமையாளனைப் பிறக்கின்றான். ஆதலால் ஒவ்வொருவரும் உலோபத்துவமின்றித் தானஞ் செய்யவேண்டுவது அத்தியாவசியகமென விளங்குகின்றது. தானத்திற்குயோக்கியபாவார், நல்ல அநுஷ்டானம், தவம், ஞானம் இவற்றினையுடையபெரியோராம். முடவன், குருடன், செவிடன் ஊமை, வியாதியஸ்தன் இவர்கள் தானமின்றி எப்போதும் அன்னபானதிகளால் உபசரிக்கப்படுவர். தானத்தைப் பெற்றுக்கொள்ளுதற்குத் தக்க யோக்கியர் சமீபத்திலிருக்கவும் அவரைவிட்டு யோக்கியரல்லாதாரைத் தேடிக்கொடுப்பது தகுதியன்று. கொடுத்தும் பலனில்லாமற்போம். தானஞ்சிறிதாயினும் பெரிதாயினும் சிரத்தையோடுசெய்தல்வேண்டும். அன்றி தானத்தைப்பெற்றுக்கொள்பவரிடத்து விசுவாசமு மிருக்கவேண்டும். மதுபானம், சூதமுதலியவற்றிற்காவது, ஒருவனது கோபத்திற்காவது, தாக்ஷணியத்திற்காவது, துன்பத்தினின்றும் தப்புவதிற்காவது கொடுத்தல் தானமாகாது. கொடுப்பவன், வாங்குபவன், சிரத்தை, தருமத்தோடு கூடியபொருள், தகுந்தகாலம், தகுந்த தேசம் இவை யாறும் தானத்திற்கு அங்கங்களாம். அவற்றில் (1) பாபமில்லாமை, நோயில்லாமை, தருமசிந்தை, காரணமின்றிக்கொடுக்கவிருப்பம், சுத்தமான மனநிலை, பழிக்கப்படாத ஜீவனம் இவ்வாறு முடையானே கொடுப்பவனிற் சிறந்தவன். (2) தாய் தந்தை குரு இவர்களால்திருத்தப்பட்டுக் குற்றமற்ற நடையோடும் தவவோடும் கூடியவனும் இந்திரிய ஜயமுள்ளவனுமே தானத்தைப் பெற்றுக்கொள்ளத் தக்க பாத்திரனெனப் படுவான். (3) தேகசுத்தி, சித்தசுத்தி, யாசிப்போரைக் கண்டு சந்தோஷித்தல், அவர்களை ஆதரித்தல், பிரியவசனங்களால் உபசரித்தல், அசூயை யற்றிருத்தல் இவை தானத்திற்குரிய சிரத்தையாம். (4) தருமமான தன்சீலத்திற்கு விரோதமின்றித் தன் பிரயத்தனத்தினால் தேடிய பொருள் அற்பமாயினும் பெரிதாயினும் அதுதானத்திற்குத் தக்க பொருளாம். (5) எந்தக்காலத்தில் எந்தப் பொருள் கிடைப்பதரிதோ அந்தக்காலத்தில் அந்தப்பொருள் கொடுக்க அது தகுந்தகாலமாகும். (6) எந்தத்தேசத்தில் எந்தப்பொருள் கிடைப்பதரிதோ அந்தத் தேசத்தில் அந்தப்பொருள் கொடுக்க அது தகுந்ததேசமாகும்.

தானம் அற்பமாயினும் அது சில ஏதுக்களால் அதிகமாவதும் அதிக தானமே சில ஏதுக்களால் அற்பமாவதுமுண்டு. அவஸ்தை, தேசம், காலம், யாசிப்பவன், கொடுப்பவன் இவற்றினுடைய குணத்தினால் தானமாவது துஷ்பலம், நிஷ்பலம், ஹீனம், துல்லியம், விபுலம், அக்ஷயம் என்கிற ஆறு விபாகங்களைப் பெறுகின்றது. அவற்றில் திருடன், கொலைஞன் முதலானவர்க்குக் கொடுத்த தானம் கெட்டபலனைத் தரும்; இது துஷ்பல விபாகம். பெரியதா

ணமாயினும் சிரத்தையில்லாமற் கொடுத்தால் அதுபலனைத்தராது; இது நிஷ்பலவிபாகம். பிறருக்குத் துன்பஞ்செய்வதாகக் கொடுத்த தானம் பெரிதாயினுந் தாழ்மையடையும்; இது ஈனவிபாகம். தானம், சாஸ்திரங்கள் விதித்தபடியே செய்வதாயினும் அது மனங்கலங்கிக் கொடுக்கப் பட்டால் அதற்குத் தக்க பலனைத்தரும், அதிகபலனைத் தராது ; இது துல்லிய விபாகம். முன் சொன்ன ஆறு அங்கங்களோடுசெய்ததானம் விசேஷபலனைத்தரும்; இதுவிபுலவிபாகம். தயவோடு கொடுத்த தானம் அக்ஷயபலனைத்தரும்; இது அக்ஷயவிபாகம். தானமானது பின்னும் ஆஜஸ்ரிகம், காமியம், திவ்யம், நைமித்திகம் என்னும் நான்கு பிரகாரங்களை யுடையது. எப்போதும் ஸ்திரமா யிருக்கிற தானம் ஆஜஸ்ரிகம்; அஃதாவது தண்ணீர்ப்பந்தல், தோப்பு,ஏரி,குளம் இவற்றையுண்டாக்குவது. தனது மக்களுக்காகவும் ஒருவனை ஜெயிப்பதற்காகவும் ஐஸ்வரியத்தினிமித்தமாகவும் ஸ்திரீகள் பொருட்டாகவும் கொடுப்பது காமியம். யக்கியஞ்செய்து கொடுப்பது திவ்யம். இன்னகாலத்தில் இன்னகிரியையில் இதன்பொருட்டுக் கொடுப்பது என்று காலம் கிரியை பலன் இவற்றை அபேக்ஷித்துக் கொடுப்பது நைமித்திகம்.

இது கொடுத்தால் ஆன்மாக்களுக்கு இன்பத்தைக் கொடுக்கும் என்கிற விவேகத்துடன் பிரதியுபகாரம் வேண்டாமல் நல்லதேசத்தில் நல்லகாலத்தில் சத்பாத்திரத்தில் செய்த தானம் சாத்துவீகமென்றும், பிரதி பிரயோஜனத்தையும் தானபலனையும் விரும்பி மனங்கலங்கிச் செய்த தானம் இராஜசமென்றும், தகர்ததேசத்தில் தகாதகாலத்தில் தகாதபாத்திரத்தில் அசுத்தமானபொருளைக்கொடுப்பது தாமசமென்றும் பகவத்கீதையில் ஸ்ரீகண்ணபிரான் அருளிச்செய்திருக்கின்றார். ஆகையால் கல்வி அறிவு ஒழுக்கம் தேவதாபத்தியிவற்றினைப்பெற்ற உத்தம அதிகாரிகள் சாத்துவீகமான தானத்தையே செய்யவேண்டியது. தானங்கள் உத்தமதானமென்றும், மத்திமதானமென்றும், அதமதானமென்றும், மூன்றுவகைப்படும். அவற்றில் அன்னதானம், வித்தியாதானம், கன்னிகாதானம், வஸ்திரதானம், கோதானம், பூதானம், சொர்ணதானம், அசுவதானம், கஜதானம் ஆகிய இவைகள் உத்தமதானம். மனை, அவிழ்தமுதலானவைகள் கொடுப்பது மத்திமதானம். பாதரக்ஷை, வாகனம், குடை, பாத்திரங்கள், ஆசனம், விளக்குகள், விறகு, பழவகை முதலியவை கொடுப்பது அதமதானம். இம்மூவகைத் தானங்களுள் சிலகாலத்தில் சிலதேசத்தில் ஒன்று மற்றொன்றாகவும் மாறும். ஆதலால் எந்தெந்தகாலத்தில் எது எது அவசியமும் நன்மையும் பயக்கத்தக்கதாயிருக்கின்றதோ அந்தந்தகாலத்தில் அதை விவேகிகள் அறிந்து செய்யக்கடவர். மற்றைய தானங்களைப் பார்க்கிலும் அன்னதானம்விசேஷமாயினும் அவ்வன்னத்தைத் தாமே என்றும் தேடிக்கொள்ளவும், தம்மை யடுத்தவர்க்குக்கொடுக்கவும், அறம் பொருள் இன்பம் வீடு என இந்நாற்பேற்றையும் அளிக்கவும் முக்கியகாரணமான வித்தியாதானமொன்றே இக்காலத்துக்குமாத்திரமன்று. எக்காலத்துக்கும் எத்தேசத்துக்கும் அத்தியாவசியத்திலும் அத்தியாவசிய

மாம் என்று நாமுறையாபலே கற்றோரும் மற்றோரு மறிந்திருக்கின்றனராகலின் அதுவிஷயத்தைப்பற்றி நாம் விசேஷமா யுரைக்கவேண்டியதில்லை. காலத்துக்கேற்றவாறும் சாஸ்திரத்திற்கு விரோதமில்லாமலும் உலோபத்துவமின்றித் தானங்கள் செய்துவருவார்களேயானால் ஆரியர்கள் யாவரும் இகலோகத்தில் க்ஷேமப்பட்டுப் பரலோகத்தில் பரமபதம்பெற்றுச் சுகமாய் வாழ்வார்களென்பதிலையமில்லை. ஒருவன்செய்த நல்லகருமம், தானம் தான். கற்றகல்வி இவற்றைத் தானேபுகழ்ந்து கூறுவனாயின் அவை யழிந்துபோம். தன்னைத் தானே புகழ்ந்துகொண்டால் ஒளிமழுங்கிவிடுகின்றது. செய்தபின் விசனப்பட்டாலும் விபத்தையடைகின்றான் இது ஸ்மிருதிகளின் கருத்து.

உபகாரப்பிரியர்.

இன்னமுமா ?

இன்னமுமா ஞானம் அஞ்ஞானத்திக்குப் பயந்து மூலையிற்பதுங்கிக் கைகட்டி தண்டஞ்சமர்ப்பிக்க வேண்டும் ? இன்னமுமா கல்வி ஞானசூனியரைக்கண்டு பயந்து பாதாளத்திலழுந்திக் கிடக்கவேண்டும் ? இன்னமுமா நல்லோர் துன்மார்க்கருடைய கூட்டத்தினின்று வேறுபடாமலிருக்கவேண்டும் ? இன்னமுமா பிள்ளைகள் தம்பெற்றோரை வருத்தப்படுத்தித் துறத்திவிட்டு பனியாளுக்குப் பணிவிடைசெய்துகாலங்கடத்தவேண்டும் ? இன்னமுமா கலகப்பிரியர் தமது துற்குணத்தினின்று விலகிச் சற்சங்க சாவகாசத்தையும், ஒற்றுமை குணத்தையுங் கைநழுவ விடவேண்டும் ? இன்னமுமா மதுபானப்பிரியர் தமது செல்வத்தை யிழந்து தரித்திரத்தை விலைக்கு வாங்கும் வியாபாரத்தை நடத்தவேண்டும் ? இன்னமுமா நன்மைக்குந் தீமைக்குமுள்ள வித்தியாசத்தை நாம் தெரிந்துகொள்ளாதிருக்கவேண்டும் ? இன்னமுமா கடவுளுடைய நினைவுநம்மைத் தட்டியெழுப்பாமலிருக்கவேண்டும் ? இன்னமுமா இவன் ஜாதியிலுயர்ந்தவன் இவன் தாழ்ந்தவனென்னும் பேதம் வளர்ச்சியடையவேண்டும் ? இன்னமுமா பெண்கள் தமதுகல்விச் சாமர்த்தியத்தை யுலகில் விகஜிதப் படுத்தாமல் அடுப்பூதி வறுமையடையவேண்டும் ? இன்னமுமா நமது இந்தியா சுயமுயற்சியற்று தரையோடு தரையாக வேண்டும் ? இன்னமுமா இந்தியர் மேனாட்டுணர்ச்சியையே எதிர்நோக்கி யிருக்க வேண்டும் ? இன்னமுமா நம்மை நாம் தேற்றிக்கொள்ளும் வழிகளில் முட்களைப் பரப்பவேண்டும் ? இன்னமுமா பழைய ஆசாரங்களைச் சீர்தூக்கி அதில் மேம்பாடுள்ளவைகளைப் பின்பற்றி யனாசாரமாகவுள்ளவைகளை விலக்காதிருக்கவேண்டும் ? இன்னமுமா இவன் கல்விவந்தன் இவன் படாடோபக்காரனெனப்பகுத்தறியாதுளறித்திரியவேண்டும் ? இன்னமுமா சாதுக்களையிகழுந் துன்மார்க்கத்தினின்று நீங்காதிருக்கவேண்டும் ? இன்னமுமா ஒருவரையொருவர் மேற்கொள்ள தூடணப்பத்திரிகைகளைப் பிரசுரித்து மானத்தைவிடுத்து அவமானத்தை யாபரணமாகத் தொடுத்துக் கொள்ள வேண்டும் ? இன்னமுமா குண்டுணிகள் தமது குணத்தை மேலுமேலும் விர்த்திக்குக் கொண்டுவரவேண்டும் ? இன்னமுமா மதச்சண்டைக்காரர் தமது தூடணமூட்டைகளை யிறக்கிவிட்டுச் சன்மார்க்க நிழலில் இளைப்பாறுதிருக்கவேண்டும் ? இன்னமுமா உலகின்பகட்டு வேடங்களிற் றலையிட்டு ஞானானந்தத்தை யிழக்கவேண்டும்? இன்னமுமா நமதுபத்திரிகாபிமானிகளிற் சிற்சிலர் இரண்டாவது வருடசந்தாவையுஞ் செலுத்தத் தாமதப்பட்டிருக்க வேண்டும்.

S. V. மாணிக்கன்.

இந்திய உழவர்களின் வறுமையும், பொறுமையும்.

இவ்வருடம் பெப்ரவரிமாதமே பஞ்சக்குறிகள்தோன்றி அதுநாளுக்கு நாள் பலப்பட்டு அநேக உழவர்களை ஊரைவிட்டோட்டியது. இதனால் சிலர் சிங்கப்பூர், நெட்டால் முதலிய பிரதேசங்களுக்குப் பிரயாணமாயினர். சிலர் கூலிகூடையைத் தலைமேற் சுமந்துகொண்டனர். சிலர் கப்பரையொன்றேந்தி யிரக்கத்துணிந்துகொண்டனர். அதிலுஞ் சரியான ஆகாரமற்றுச் சிலர் எமபுரஞ் சென்றனர். இவர்களுக்கு இப்பஞ்சத்தால் எவ்வளவோ கஷ்டங்கள் நேர்ந்திருக்கலாம். என்றாலுமிவர்கள் வாய்மையையும்,பொறுமையையுமிழந்தவர்களல்ல. ஆனால் நமது கவர்னர்ஜனரலாயிருந்த லார்ட்கர்ஜன் சொன்னதுபோல பொய்முதலிய கிருத்தியங்களை யிவர்கள் கைப்பற்றி யிருப்பார்களேயானால் இதுமட்டும் ஒருவாறாக ஜீவனத்தை நடத்தியே யிருப்பார்கள். இவர்கள் அரிச்சந்திரன்கதை நன்குணர்ந்தவர்கள். ஆனபடியால்தான் தாம் வசித்திருந்த பதியை யிழந்தனர். பாலருடன்பசிநோயால் வருந்தினர் தமக்கிருந்த சொத்துக்களையெல்லா மிழந்தனர். இனிவருவதாகிய மோக்ஷசாம்பிரதாயத்தையே பெரிதெனமதித்துத் தங்கள் உண்மையை யழக்காதிருந்தனர்.

நமது கவர்னர் ஜனரலாகவந்த லார்ட்கர்ஜனுடைய ராஜிநமாவை இப்போது கவனிப்போமானால்; இந்தியர்கள்,வறுமையிலும் வாய்மையையே நோன்பெனக் கருதுகிறவர்கள், இவர்களைப் பொய்யர்களெனப் பிரசங்கித்துவிட்டுமீள இவர்களுடைய தேசத்திலே தாமிருப்பது தகாதெனுங் கருத்தே காரணகாரிய அணிபாகநிற்கும். ஜர்மனி, ருஷியா, பிராஞ்சு, முதலிய எந்தத் தேசத்திலேனு மிப்பேர்பட்ட பஞ்சந்தோன்றி யிருக்குமானால் அந்த தேசத்துப் பிரபுக்களுடைய செல்வங்களையெல்லாங் கொள்ளையடித்து ஊர்முழுதும் பெரியகூச்சலை யுண்டாக்குவார்களென்பது திண்ணம். ருஷியாவிலுள்ள உழவர்களிப்படி யெத்தனையோ முறைகளிற் செய்திருக்கிறதாகத் தெரியவருகிறது. ஆனால் நமதிந்திய உழவர்களோ தலைவிதியையே தம்விதியாகக் கொண்டவர்கள். ஆகையினால்தான் மானமிழந்து, நாணிழந்து இரக்கத்துணிந்து கொண்டனர்.

இவ்விதமாக இந்தியர்களின் வாய்மையையும், பொறுமையையும் லார்ட்கர்ஜனுக்குக் காட்டவேண்டி சோதித்த தெய்வமே யிப்போது இம்மாதம் 5-ந்தேதி முதற்கொண்டு மழையை யனுப்பியது போலும். இம்மழை சென்னைராஜதானியின் பலபாகங்களிற் பரவியிருக்கிறதாகத் தெரியவருகிறது. என்றாலும் இம்மழையே யுழவர்களுக்கு ஆதாரமாகவுதவாது. பிச்சையெடுத்தும், கூலியெடுத்தும் வயிற்றை வளர்த்துக்கொண்டிருக்கும் உழவர்களுக்கிப்போது ஏர் முதலானதுகளை நடத்த மாடுவேண்டும். விதைக்கும் விரைவேண்டும். தேகத்தில் பலம்வேண்டும். ஆகையால் நமது இந்துதேயத்துப் பிரபுக்களிவர்களைச் கண்ணோக்கிப் பார்க்கவேண்டும். தங்களாற் கூடுமானவரையிலிவர்களுக் குதவிசெய்யவேண்டும். இவர்கள் கடைதேறும் வழியைத் தேடவேண்டும். மழைபெய்த உடனே உழவர்களுக்கு ஆகாரங்கிடைத்துவிடாது. உழவர்கள் தமது ஆடுமாடுகளைச் செடியிற்கட்டிவைத்துவிட்டு இரக்கத்துணிந்தவர்களல்ல. அல்லது தமக்கிருந்த எல்லாவற்றையும் விற்றுபொன்னகைமாற்றி பெரியகட்டியாக உருக்கிவார்த்து கௌபீனத்தில் முடிந்துகொண்டு இரக்கத்துணிந்தவர்களல்ல. எல்லாவற்றையும் விற்று சுட்டு தின்றுவிட்டு ஒ[illegible]க்கையுமாகப் புறப்பட்டவர்களாகவே யிருக்கிறார்கள். ஆகவே

இப்போது மழைபெய்தவுடனே பயிர்வேலையைத் தொடங்குவதற்கு அவர்களிடத்தில் என்ன சௌகரியங்களுண்டு? ஒன்றுமேயிராதென்பது தெரிந்த விஷயம். இந்தசமயத்தில் ரெவினியூ உத்தியோகர்தர்கள் மழைபெய்யவே பஞ்சம் நீங்கிவிட்டதாகரிப்போர்டுகள் எழுதப்படாது. அப்படி யெழுதும் ரிபோர்டுகள் பலவிதத்திலுங் கண்டிக்கப்படத்தக்கதா யிருக்கும். ஆகவே இப்போது வறுமையை யடைந்திருக்குஞ் சமுசாரிகளைக் கடைத்தேற்றும் வழிகளை யிவர்கள் தேடுவார்களென வேண்டுகின்றனம். இவர்கள் இப்போது சமுசாரிகளைக் கவனியாதிருப்பார்களேயானால் பெய்தமழையை இவர்கள் கொடுமையாகிய காய்ச்சலுக்கே சரிப்படுத்திக் கொள்ளவேண்டி வருமேயன்றி நாட்டுக்கு மற்றொரு க்ஷேமமும் வராது.

இந்தமழையினால் நாடு செழித்துவிட்டதாகக் கருதி கவர்ன்மெண்டார் பலவரிகளாலுங் குடிகளை யிம்சிக்காதிருக்க வேண்டுகிறோம். இந்த மழையினால் க்ஷேமமுண்டாகலாமெனக் கருதிய வுழவர்கள் எப்படியாவது தமது தொழிலை நடத்தவேண்டுமென முயற்சிப்பார்கள். இதற்கு நமதிந்திய பிரபுக்கள் கொஞ்சம் உதவிபுரிவது அவர்களுடைய பெருங்கருணைக்குங் கீர்த்திக்கும் மதிப்பாயிருக்கும். இந்த சமயத்தில் உழவர்களை வரிமுதலானதுகாளால் வருத்தாமலிருப்பது நமது இங்கிலீஷ் ராஜரீகத்திற்கு தருமமாயிருக்கும். சிலபேதையர் நம்மை நிந்திக்கத்துணிவதுபோல நாம் கவர்ன்மெண்டாரையும், ரெவினியூ உத்தியோகஸ்தர்களையும் பழிக்கத்துணியவில்லை. இவர்கள் நமக்கு எத்தனையோ வழிகளில் பலமுறையும் நன்மையே செய்தவர்கள். ஆகையினால்தான் இக்காலத்தும், இவ்விஷயத்திலும் நமக்குவேண்டிய நன்மைகளை நாம் இவர்களிடத்திற் கேட்டு பெற்றுக்கொள்ளக் கடமைப்பட்டோம். காருண்ய கவர்ன்மென்டார் நீதிநம்மைக் கைசோரவிடாது காபாற்றுமாக.

பத்திராதிபர்.

பத்திராதிபர் குறிப்புகள்.

கடிதமெழுதுகிறவர்கள், சுருக்கமாகவும், வீண்விவகார மின்றியும் சுத்தமாக ஒரேபக்கத்திலும் எழுதியனுப்பவேண்டியது. ஜனன, மரண அறிக்கைகளை எழுதவிரும்புவோர்கள் தம்பெயருட்பட மூன்று வரியிலேயே அடங்கும்படி எழுதினால், அவைகளுக்கு சார்ஜிவாங்கப்பட மாட்டாது. அதற்கதிகமாகும் பட்சத்தில் 4 அணு வாங்கப் படும். பாட்டாக எழுதி போட்டால் 8 அணு வாங்கப்படும். நமது பத்திரிகையை வாங்கவிரும்பும் அன்பர்கள்கல்வியில் சிறிதுபயிற்சி யுள்ளவர்களாகவே யிருக்கவேண்டியது நலம்.

நமது பத்திரிகை குறைந்த சந்தாவுக்கு அனுப்பப்படுவதால், ஏதாவது பதில் பெறவிரும்புவோர்ரிப்ளைகார்டாவது தபால் தலையாவது அனுப்பவேண்டியது. ஆதரணைக் கர்த்தர்களும் நன்கொடையாளரும் ஸ்டாம்புகளனுப்ப வேண்டியதில்லை. நட்பெயிட் கடிதங்களைத் திருப்பிவிடப்படும். கடிதமெழுதுகிறவர்கள் தத்தம் உண்மையான பெயருடனும் எழுதி யனுப்பவேண்டியது. அன்பர்களெழுதும் கடிதங்களைக் குறைக்கவும் கூட்டவும் திருத்தவும் பத்திராதிபருக்கு அதிகாரமுண்டு. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் திரும்ப அனுப்பப்படமாட்டாது. பத்து கையொப்பங்களைச் சேர்த்துவசூலித்தனுப்பும்அன்பர்களுக்கு உத்தரவாதமான (டைம்பீஸ்) கடியாரம் ஒன்று இனமாக அளிக்கப்படும்.

கடிதம்

“ ஜன்மாந்திரமாவதியாது? ” எனத்தலைப்புவைத்தெ
ழுதிய வருக்கு; ஐயா! கடந்தவருடப் பத்திரி
கையில் தாங்களெழுதிவந்த ஷெ விஷயம் நமது சந்தாதா
ரர்களி லநேகருக்கு பெரும் நன்மையை யுண்டாக்கியிரு
க்குமென்பதற் காக்ஷேபமின்று. என்றாலும் இது மூன்று
வது வருட முதல் பத்திரிகை யாகையால் அநேக புதிய
நபர்களுக்கு மாதிரி காப்பிகள் அனுப்ப வேண்டியிருக்கி
றது. அவர்களுக்கு முன்தொடர்ச்சி தெரியாமையால்கஷ்டத்தையுண்டு
பண்ணுமாகலின் தங்கள் இதுவரையும்எழுதிவந்ததோடுஇனியுள்ளதை
யுஞ்சேர்த்து 1000 காப்பிகள் அச்சிட்டுக்கொடுத்தால் தபாற்செல
வின்றி நமதுபத்திரிகையிலேயே அநுபந்தமாகச் சேர்த்தனுப்பலாம்.
இது தாங்களெடுத்துக் கொண்ட பிரயாசைக்குப் பெரும்பேற்றைத்
தரும். இதைப்பற்றி கவனிப்பீர்.

“ ஏகாந்தசேவை ” எனத்தலைப்புவைத்து எழுதியவருக்குச் சொல்ல
வேண்டியது மிதுவே. இவர்களெம்மை மன்னிக்க வேண்டியது கடமை. இத
ன்றிவேறெந்த விஷயங்களையாவது பொதுநலங்கருதி யெழுதுவார்களானால்
மிகவு நன்மையாயிருக்குமென வேண்டுகின்றனம்.

பத்திராதிபர்

சமாசாரக்கூற்று.

தார்வாரகோல்ட்மைனிங்நிலமை—ஐயர்பாதுகாரணத்தினாலேயோநமது
பழைய பரமசிவனுக்கும் கிழட்டு நாராயணனுக்கும் ஒழைவாய் ஈஸ்பரனுக்
கும் தார்வார்மை னிங்மேல் கோபம்கொண்டு குண்டுமருந்தினால் கொலைசெய்
துக்கொள்ளவும் தண்ணீரில்கானே மாளவும் பத்துநாளாய்ப் புத்தியைக்கெ
டுத்து வருகிறார்கள். 1905 செப்டம்பர் மாதம் 6-தேதி புதன்கிழமை யன்று
சாயங்காலம் $4\frac{1}{2}$-மணிக்கு ஊசி நூலைக்காண்பித்து போசம் செய்யும்தய்யற்
காரப் பையயலொருவன் மூன்றுபாலியருடன் சேர்ந்துக்கொண்டு வேர்த்த
உடம்பினழுக்கெல்லாம் தீர்த்துக்கொள்ள பார்த்துப் பாதாளத்தி லிருந்து
வந்துத் தாராளமாய்த் தண்ணிநிரம்பிய தண்ணித்தொட்டியில் முன்னதாகக்
குதித்தான். மற்றமூன்று வாலிபரும் குதித்தவனைப் பார்த்தார்கள் அவனோ
அரைமணிநேரம் தண்ணியின் அடியில்சென்று சேற்றில் மாட்டிக் கொண்டு
குஸ்த்திப்பிடித்து உள்ளவே பேட்டாய்விட்டான். பேட்டானென்றுதெரிந்து
மற்றமூன்று மோட்டா சாஸ்த்திரிப்பாலியர்களும் எபனுயிருந்த இஞ்சின்பக்
கம் எடுத்தார்கள் கப்பி. அப்போது அங்குள்ளவர்கள் இவர்கள் ஓட்டத்தைப்
பார்த்து ஏண்டா அப்பா தம்பி என்றதற்கு வேண்டாபப்பா வப்பு என்றார்
கள். சந்தேகத்தின்மேல் தடுத்துக்கேட்டதற்கு தப்பி தையற்காரன் தண்
ணீரில்விழுந்து தலைகீழாய் நட்டுக்கொண்டு மாண்டானென்று சொன்னார்கள்
அதின்பிறகு அங்குள்ளோரும் அவன் சுற்றத்தாரும் வெளியில் எடுத்துவீட்
டுக்குக் கொண்டுப்போய் விட்டார்கள் போலீஸ் விசாரணை இனிமேலாகும்
தார்வார்கோள்மை நீங் இப்போது தான் கோலார்பைனிங்கைப்போல் சுருவு
காண்பிக்கிறது.

இப்படிக்கு;

V. C. மதுரைநாயகம் பிள்ளை.

மாக்ஷிமைத்தங்கிய "பூலோகவியாச" னெனும் பத்திரிகாசிரியரே தாங்கள் தயை பாலித்து யானெழுதுஞ் சிலவிஷயங்களை, ஷை வியாசனிற் பிரசுரிக்க வெகு விநயமாய் வேண்டுகிறேன்.

சில்காலமாய். இப்பூலோக வியாசனில், "மதுவிலக்குஎன்னுந் தலைப்பிட்டு மதுபானஞ்செய்வதாலுண்டாகுஞ் சீர்கேட்டைமென்மேலாய்கூறிஎவரையுமெள்ளளவேனு நிந்தியாமலுஞ் சுட்டிக் காட்டாமலும் பொதுப்படப் பேசி, கள் முதலானவற்றைப் பருகுவது தகாது தகாதெனப் பன்முறையும் லோகோபகாரமாய் ஒரன்பர்பேசிவருவது தெள்ளெனத்தெரிந்ததே. இதனை வியாசனின் வாயிலாய் வாசித்தறிந்தவன்பாளரனைவருக்குந் தெரிந்திருப்பதுமன்றி ஷை மதுபானஞ்செய்வதிகிஞ்சிற்றேனும் யோக்கியதையல்லவென்றும், மதுவே, அக்கிரமத்திற்கு ஆதாரமாகவும் போந்தபொருளாகவு மிருப்பதென ஒத்துக்கொள்வா ரநேகர். தவிர இதனை யொருமட்டாய் விலக்கியும், ஷை அன்பரெடுத்துக்கொண்ட பிரையாசைக்காகவும் இதே வியாசனில் சிலர் வந்தனோபசாரமும் வரைந்துள்ளார், எனவே இக்கொடிய வஸ்துவை நிராகரித்து நீக்கினோரநேகரா யிருக்கலாமெனத் தடையில்லை. இங்ஙனமிருக்க இதிலுங்கேடானதும், அருவருக்கத்தக்கதும் கண்டவர் கேட்டவரெல்லாம் சீயென வெறுத்து, அம்மம்மா !" இவனா? இவன் நாற்றமே யுதவாது இவனோடு உறவாடுவதைவிட மூதேவியின் வாகனத்தோ டுறவாடலாமே, இவன் சங்கதியே காதில்விழவேண்டாம், வேண்டாமெனப் பலருமஞ்ச கலகத்திற் கேதுவாக கட்டுச்சோற்று பூனையைப்போ லாங்காங்குத்திரிந்து உற்றவரை யுறவாடி கெடுக்கவேண்டாம், ஊரோடுங் குண்டணியாய்த் திரியவேண்டாமென தலைபிற்தேங்காயுடைத்த மேறையெழுதிவைத்த பாட்டியின்சொல்லைப் பற்றறமறந்து ஓயாமற் புறம்பேசி குண்டுணியாய்த் திரிந்துழல்பவரையுங் குறித்து சிலர், எழுதிவந்தும் கற்பாறைபின்மீது விதைத்தவிதையைப்போன்று விழலாய்ப்போக காண்கிறோமொழிய, கலியுக நாரதரான இவர்கள் புரிந்துவரும் நாசத்தொழிலை விடுத்து நலத்தை நாடினரில்லையே. இனியேனு மிவ்விதக்குணத்தை விடுத்து அன்புமுதலான திவ்விய பூஷணங்களைப் பூண்டு பஹிரங்கமாய், யான் குணப்பட்டேன் முற்றும் விட்டேன் புனிதனானேன் என்பதாய் மேற்படி, மதுவிலக்குஎனுஞ் சித்தாந்த மெழுதுமன்பர்க்கு வந்தனமளித்த மேறை- இக்கலியுக நாரதருந் தமக்காக சிரத்தை யெடுத்துக்கொள்ளு மன்பர்களுக்கு வந்தனோபசாரமெழுதி நலத்தை நாட பகவனருட் புரிவாராக—

நீலகிரிவேங்கை.

அன்புள்ள அறிக்கை.

நமது பத்திராதிபர் ஸ்ரீமான் பூஞ்சோலை - முத்துவீர வுபாத்தியாயரவர்கள் கடந்தவாரங் கோலார் விஜயஞ்செய்தபோது உடம்பு பக்குவமின்றியிருந்ததை நோக்கி விசனிக்கவேண்டி யிருந்தது என்றாலும், சித்தூர்ஜில்லா வேலூரையடுத்த கரிகேரியென வழங்குங் (கல்கிரி) கிராமத்தில் மாரிகுப்பம் ஸ்ரீமான் V. தம்புசாமிப்பிள்ளை, ஆ. து. சின்னசாமிப்பிள்ளையிவர்களின் நன்முயற்சியால் புதுப்பித்த ஸ்ரீ அரஹரிதோத்திரக்கூடத்தில்தாமரங்கேற்றிய ஸ்ரீ அரஹரித் தோத்திரப்பாக்களின் சுவையையும், சமயத்துக்குத் தக்கவாறு ஜாதிபேதமும், மதபேதமும் பேசுகின்ற வம்பர்கள் வாயடங்குமாறு பேசிய பிரசங்க சாரத்தையுங் கேட்க ஆனந்தப்பரவச மெய்தவேண்டி யிருந்தது. அக்காலத்தில் பெங்களூர் ஸ்ரீமான் P. V. கோவிந்துராஜிலு நாயுடுகாரு அவர்களும், ஸ்ரீமான், மு. முனிசாமித் தொண்டரவர்களும், பிரசங்கித்த பக்திமார்க்க உபந்யாசங்கள் பாலுந்தேனெனருசித்தன. இவ்வித சத்காரியங்களி லுழைப்பவர்களின் புகழல்லோ புகழ்.

A. P. பெரியசாமிப் பிள்ளை.

"பூலோகவியாசன்" பத்திராதிபருக்கு வந்தனம்.

ஐயா! இதனடியில்வரும் மகான்களருளிய அன்பர்க்கறிவித்தலென்னும் கண்ணிகளை சர்வ ஜனோபகாரமாய் பிரசுரஞ்செய்ய கோருகிறோம்.

1. தனியான ஒப்பற்ற மெய்யறிவானந்த பிருமம்
சாந்தி பூரண வமுதம் அன்பரே.
2. அதுஉருவமும் குற்றமு மற்றது இதை
அறிந்தவ ரமுதராவர் அன்பரே.
3. மற்றவர் துக்க மடைவர் மெய்வெல்லும்
பொய்யல்ல மறைமொழி யீதாகும் அன்பரே.
4. அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றேயுலகு அன்பரே.
5. பகவானைத் துதியாமல் பலரூபங்கள் செய்து
பணிவதா லென்ன பலன் அன்பரே.
6. பொன்வெள்ளி யிரும்பீயம் பித்தளை மண்கல்லால்
பொம்மைகளைச் செய்து அன்பரே.
7. போஜன பலகாரம் பாயாசம் வடை தோசை
போற்றிப் படைப்பதேனோ அன்பரே.
8. சொல்லு மவைகளைப் படைக்கா விட்டா லவை
சோர்ந்திறந்து போமோ அன்பரே.
9. அல்லும் பகலு மவை அறுசுவை யுண்பதானல்
அப்போதும் படைப்பீரோ அன்பரே.
10. பண்ணும் பொம்மை கட்குப் பலவாடை பணிகளும்
பரிந்து சாத்துவ தென்ன அன்பரே.
11. சொர்ண வஸ்திரா பரணஞ் சுற்றித் தரிக்கா விட்டால்
துன்ப மடையுமோ அன்பரே.
12. சுயமாய வைகளைச் சுற்றிடணியு மானல்
சோராமல் தருவீரோ அன்பரே.
13. பரப்பிரமம் அருளாலே படைத்த வெளியசீவர்
பகருந்தங் குறைகளை அன்பரே.
14. பார்க்காமல் கேழ்க்காமல் குருடர் செவிடர் போல
பதுங்கிநீ போவதென்ன அன்பரே.
15. பகரும் அச்சீவர் கட்கு பரிவுடன் அன்னமும்
பலவாடையும் தந்தால் அன்பரே.
16. அன்னவர் பசிநீங்கி ஆரோக்யமடைவதால்
ஆருயிர்த் துணையாமே அன்பரே.
17. தாகமாய் கேட்போர்க்குத் தண்ணீரளிக்காமல்
தாறுமாறாய் திட்டுவோர் அன்பரே.
18. தாகமே யில்லாத தாம்பிரமம் கல்தலையில்
தண்ணீர் விடுவதேனோ அன்பரே.
19. சந்தன புஷ்பங்கள் சந்தோஷமாய் கொள்வோர்க்கு
தானளிப்பதை விட்டு அன்பரே.
20. சவம்போல் கிடக்கின்ற தாரவிக்கிரகங்கட்கு
சாத்துவ தென்னவாம் அன்பரே.

L. M. திருவாய்மொழி.

மரண அறிக்கை.

சென்னை மவுண்ட்ரோட் (S. Dorsamy.) ஷாப்பின் அட்டெண்டரும், அநேக ஆங்கிலப்பிரபுக்களாற் கீர்த்திபெற்றவரும், கற்றபெரியோர்களின் நேசரும், நற்குணரென்று புகழப்பட்டவரும், தேவதாபக்தியுடையவரும், எங்களது அன்பார்ந்த மைத்துணருமாகிய தானியேல் சாமுவேல் அவர்கள் தன்மனைவி ஆஞ்சிலினளம்மாளையும்; அன்னாள், ஜீவமணி, தேவஇரக்கம், கிரோன்மணி எனும் நான்கு சிறுமக்களையும் துக்கமெனு மிவ்வுலகிலிருந்தி சென்னை ஆயிந்திபநகரில் 1905ஞ ஜூலை மீ 31உ காலை 7 மணிக்குகர்த்தருக்குள் மரித்தார், வயது 37. அன்று மாலைதிருச்சபையோர் புடைசூழ மைலாபூர் கியூபில் ஜலண்டு கல்லறையில் சங். ஏபிராம் ஐயரவர்களால் நல்லடக்கஞ் செய்யப்பட்டது.

பீற்றர்டுறு, பால்டுறு, ஆ. சூ. அப்பாதுரை உபதேசியார்.

பெரம்பூர் சிறுவள்ளூரில் வசித்திருந்த எனது மருகரும், வீராசாமியவர்கள் குமாரருமாகிய பாலையம் அவர்கள் தனது மனைவியும் மூன்றுபிள்ளைகளும் தியங்க 1905ஞ செப்டம்பர் மீ 24உ ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு உயிர்த்துறந்தனர்.

சிறுவள்ளூர் H. முருகேஸம்.

செறிந்தவீடே சிக்கொடுமை யால்பிரம்பூர் வாழ்ந்தவனும் சி. கோ விந்து
பொருந்துமனை தாயம்மாள் மதியாகஸ்ட் டிருபதினிற் பூவை நீப்ப
வருந்துசுதை ஜீவரத்ந மம்மாளு மம்மூன்றும் நாண்ம றைந்தாள்
திருந்திய சி. கோவிந்தும் மூப்பஃதி லுயிர்த்துறந்தார் சிந்தை நைந்தே,

நுங்கம்பாக்கம் வீ. ஆ. சண்முகம்பிள்ளை.

சென்னை மெடிகல்ஸ்டோர் 3. வது பாக்கிங்டிபார்மெண்ட் சூப்பரன்டென்டென்ட் ஆக இருந்தவரும், சங்கீதாப்பியாசமுடையவரும், சற்சனரால்நற்குணரென்றுபுகழப்பட்டவருமாகிய ஷெயூர் கொண்டியம்மதிகிராமம்-

ம-ா-ா-ஸ்ரீ. வ. ஆறுமுகம்பிள்ளை என்பவர், 1905ஞ. ஆகஸ்டு மீ 21. ந்தேதி திங்கட்கிழமை பகல் 2. மணிக்கு பரமதமடைந்தனர்.

அ. ஆடியபாதம்பிள்ளை,

ஜனன அறிக்கை.

அரியசா மிப்பதுமத் தாண்மலரி னருள்வேண்டு மன்புற் றேநற்
பிரியசா தனமாகு நன்னெறியை மனத்திருத்தும் பேற்றான் கோலார்
பெரியசா மிப்பிள்ளை தம்பனையா ளோடிழைத்தப் பெருந்த வத்துக்
குரியசா தகபுதல்வ னிம்மதியா ரூந்திகதி யுதித்தான் மன்னே

F. C. தம்புசாமிப்பிள்ளை.

விநோதக்கூற்று.

கடந்த மூன்று யுகங்களிலு மிருந்தவர்களின் சரிதையை புராணங்களாகவும் நாடகங்களாகவும் எண்ணரிய புத்தகங்களை யெழுதிவைத்த புலவர்கள் நாரத முனிவரையுங் குறித்து ஒருபுராண மாவது நாடகமாவது எழுதாமற் போனதுசரியா வென வேளளூர் வாசிகள் கலியுக நாரதருக்கு ஒரு பெற்றிஷன் எழுதப் போகிறார்களாம்.

ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் நேர்ந்த சண்டையின் விஷயமாக இப்போது சமாதான நடவடிக்கை நடந்தேறுவதைக் கேட்ட "நாரதர்" ஆ - ஆ என்னையறியாமலு மொரு காரியம் நடக்குமா இதோ சமாதானத்தை அமாதான மாக்கிவிடுகிறேன் பாருங்களென வெகுஉல்லாசமாய் துடையைத்தட்டி சவால்போட்டாரரிம்.

திரிகாலவர்த்தமானியான நாரதர் அக்காலத்திற் கேற்றவாறு நன்மையானவழுற்றைப் பேசிவந்த பேறை இககலையுகைத்தூம [illegible] கலாசாலே யேற்படுத்தி புறம்பேசுதல் கலகம் விளைத்தல் பொய் புறைத்தல் முதலான அரிய விஷையங்களையே போதித்துவரப் போகின்றதாகவும் கோளனுக்கு குண்டினி ஆகாயதந்தியொன்றடித்திருக்கிரானும் இதுவன்றோ தருமம். தூற்றும்பெண்டீர் கூற்றெனத்தகுமென்று முகத்தில் மீசையற்ற பெண்களுக்கு மாத்திர மெழுதிவைத்த பழையபாட்டி அங்கொருபேச்சு மிங்கொருபேச்சுமாய் பேசி கலகம் விளைத்துவரும் மீசை முளைத்த பெண்களுக்கு மொன்றெழுதி வையாத வஞ்சனையைப் பார்த்தீர்களாவென தாடிமுளைத்த தையலர் தானுயழுகின்றார்களாம் அந்தோ பரிதாபம்.

ஓடுகிறநாய் ஓடினால் சும்மா யிருக்கும் நாய்களுக்கு இறப்பெடுப்பது போல் கற்றவர்களும்,கற்றவர்களும் முட்டிக்கொள்ளும்போது அக்கல்வியற்றவர், புட்டஞ்சொரிந்து கலகத்தை நெட்டவைத்து கபடநாடக சூத்திரம் செய்யும்பட்டிமாக்கள் திட்டப்பட கெட்டிக்காரனுன ஜிட்டிகள் வேண்டும். இட்டப்பட்டவர்கள் சட்டென மிட்டாதாரர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

சுவற்றிற்குத் தேள்கொட்டினால் மிடாவுக்கு நெறிகட்டியது போலவும், அவனேன் செத்தான் இவளேன் அழுதாள் என்பதுபோலவும் சந்தேகித்து கலகமூட்டி ஆழந்தெரியாமல் கால்வைப்பவர்கள் யாராவது உண்டா என்று நமது வியாசன் அறிவிக்க கோருகிறேன்.

வேங்கைவீரன்.

சமாசாரக்கொத்து.

சென்னையிலும் மற்றும் சுற்றுப்புறங்களிலும் நல்ல மழை பெய்கிறது. வாந்திபேதி முற்றிலும் மட்டிட்டுவிட்டது.

புழலேரி—ஜலக்குறைவுபட்டிருந்த புழலேரி, தற்போது பெய்தமழையால் ஏறக்குறைய நிரம்பப்பட்டது. முன்னிருந்த மட்டத்திற்கு4 அடிஉயர்ந்தது. சுதேசிய நடவடிக்கைகளைப்பற்றி 18௳ எஸ்பிளநேட் மைதானத்தில் ஓர்பெருங்கூட்டம் கூடப்பெற்றது. அக்காலத்தில் ஆயிரம் கணக்கான ஜனங்கள்கூடினார்கள். சென்னை ஐகோர்ட் சீப்ஜஸ்டிஸ் மிஸ்டர் ஆர்னல்ட் ஒயிற்றென்பவர் ரஜாவினின்று திரும்பிதன துவேலையைக்கைக்கொண்டார்.சென்னை போலீஸ் C. டிவிஷன் கான்ஸ்டேபில் பச்சையப்ப னென்பவன் நம்பிக்கைத் துரோகமான வியாஜியத்தில்பிரவேசித்து அதைபஹிரங்கப்படுத்தாமல்அடக்கினகுற்றத்திற்காக, டவுண்பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேய்ட் மிஸ்டர் அசிஸ் உடீன் பாதூர்சாயபு அவர்களால் 3-மாதம் கடுங்காவல் பெற்றான். போலீசுபுலிசளே இப்மாதிரி செய்வது புன்சிரிப்புக்கு இடமாகிறதல்லவா ? இம்மாதம் 18௳ கல்கட்டா கிட்னப்பூர் டார்க்கில்சாமான்வண்டி ஷண்டிங்செய்துக்கொண்டிருக்குப்போது மத்தியிலிருந்த ஓர் கூலி, பப்பரில் அகப்பட்டு மாண்டான்.

இம்மாதம் 17வ இந்தியா செக்ரடேரி அவர்கள் இந்தியாவுக்குப் பழன மாகிவரும் இளவரசரையும் அரசியையும் தருவித்து விருந் தளித்தனராம். அக்காலத்தில் இந்தியாவுக்கு புதுகவர்னர் ஜனரலாகவரும் லார்ட் மின்டோ அவர்களும் இன்னும் சிலபிரபுக்களும் விஜயஞ் செய்திருந்தனர். 19வ இந்தியாவுக்குப் பழனமானார்கள். கல்கட்டாவில் பாபு பெனர்ஜி என்பவர் ஆபிரகாம் என்னும் ஒருயூதவர்த்தகர் ஷாப்புக்குள் அத்துமீறிசென்றுஷாப் [illegible] கிஞ்சிற்றும் இரக்கமில்லாமல்மறுத்ததன்றியும் ஷெபாபு அவர்களின் மீது அத்துமீறிவந்த குற்றத்திற்காக பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேய்ட் முன்பாக வியாஜியம் தொடுத்தார். மாஜிஸ்ட்ரேய்ட் அவர்கள் குற்றவாளியை ஏழைகளின் போஷிப்புக்காக ரூபா 25 கொடுத்து சமாதானமாய் விடும்படி ஏற்பாடு செய்தார்.

சென்னை யூனிவர்சிட்டி ரெஜிஸ்ட்டரார் மிஸ்டர். C. A. பாட்டர்சன் துரையவர்கள் சென்னை முனிசிபாலிட்டியார் மீது 1600 ரூபாய்க்கு நஷ்ட கேஸ்கொண்டுவந்தார். அக்கேஸ், சென்னை கீழ்க்கோர்ட்டு சீப்ஜர்ஜ் மிஸ்டர் J. G. இஸ்மித்துரையவர்களால் விசாரணை நடந்து தள்ளிவிடப்பட்டது.

13 வயதுடைய வேலு என்னும் ஓர்வாலிபன் கொஞ்சம் உப்புதிருடினதற்காக சென்னை டவுண்பிரசிடென்சி சீனியர் மாஜிஸ்டிரேய்ட் முன்பாக கொண்டுவரப்பட்டு 3 மாதம் கடுங்காவலடைந்தான். அவன் வயது நோக்கி இன்னும் 5 வருடம் செங்கற்பட்டு ரிபர்மேட்டரி பள்ளிக்கூடத்தில் வைத்திருக்க தீர்ப்பானது.

எழும்பூர்போலீஸ் காவலிலிருந்துதப்பித்து ஓடிப்போன மாணிக்கமென்பவன் பிடிபட்டு எழும்பூர் சீப் பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேய்ட் அவர்களால் 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான் இத்தண்டனைமுன்னடையதீர்ப்புப்பெற்ற 6மாதங்கழிந்தமறு ஆறுமாதம்காவலிலிருக்கவேண்டியது.

சென்னை சிட்டி சிவில் கோர்டில் லட்சுமியம்மாள் என்பவள் 90 ரூபாய்க்கு எதிராஜிலு நாயுடு சீதாபதிநாயுடு என்பவர்களின்மீது கொண்டுவந்தவழக்கு விசாரணை நடந்தேறி வரும்போது முருகேசமுதலியென்பவர் முதல்பிரதிவாதியின் குமாரனாகிய நாராயணசாமிநாயுடு 2000 ரூபாய்க்கொடுத்துவிட்டால் அந்தஅம்மாள் சமாதான மாவார்களென்றும் அவ்வாறுசெய்யதனக்கு 200 ரூபாய் கைக்கூலிப் பெற்றுக்கொண்டும் போனார். வழக்கப்படிசின்னகோர்ட்டில் விசாரித்த கேஸ் முழுதொகைக்கும் டிகிரியாய் விட்டது. 200 ரூபாய் பெற்றுச்கொண்டு போனவர் மௌனஞ் சாதித்துவிடவும் எழும்பூர் சீனியர் மாஜிஸ்டிரேய்ட் கோர்டில் மோசபாவத்து கேஸ்தொடுத்து விசாரணையானது. விசாரணைகாலத்தில் பிரதிவாதி முருகேச முதலியார் பெற்ற ரூபா வேறு விஷயத்தில் சம்பந்தப்பட்டதென்று சொன்னதின்பேரில் கோர்டார் கேசைத்தள்ளிவிட்டார்கள்.

நாடகங்களை நடித்துக்காட்டுவதில் மிகவும் வல்லவராகிய ஸர்ஹென்ரி இர்விங் என்பவர், சென்றவெள்ளிக் கிழமையன்று லண்டனில் மரித்தர்.

ராஜ புதனத்தில் இன்னும் பஞ்சக் குறிகள் பலமாகவே யிருக்கின்றன. கிருஷிகர்களுக்குக் கவர்ன்மெணடார் கூடுமான உதவியெல்லாம் செய்து வருகின்றார்களென்பது மிகவும் சந்தோஷிக்கத்தக்கது.